திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் வெளியீடு.

உ

செந்திலாண்டவன் துணை

திருவள்ளுவ நாயனார்

அருளிச்செய்த

# திருக்குறள் - தமிழ்மறை

## குறிப்புரை

by

திருப்பனந்தாள்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால்
திரு. K. M. வேங்கடராமையா, M.A., B.O.L.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
திருவுளப்பாங்கின்படி வெளியிடப்பெற்றது.

நந்தன ௵ ஆடி ௴
1952

வாழ்க்கையை நடத்துதற்கு வாய்ப்பு அளித்தற்பொருட்டு காசிப் பல்கலைக்கழகப் பேராசிரியராகிய **ஸ்ரீ B. D. ஜெயின்** M.A., LL.B. அவர்களைக்கொண்டு இந்தியில் மொழிபெயர்ப்பிக்கச் செய்து அச்சிடுவித்து உதவியருளியுள்ளார்கள். **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள்** ஆணைவண்ணம் **குமரகுருபரன்** என்னும் திங்களிதழிலும் திங்களொன்றுக்கு **8** அதிகாரங்கள் வீதம் **1951**-ம் யாண்டு தொடக்க முதல் இது வெளியிடப்பெற்று **1952**-ம் யாண்டு சூலை (ஆனி)யுடன் முடிவடைந்துள்ளது.

குறள் முப்பால்களும், இந்தியப் பொது மொழியாகிய இந்தியில் மொழிபெயர்க்கப்பெற்று தனித் தனி நூல் வடிவில் வெளிவந்துள்ளன.

இவ்வாறு அரிய பெரிய இனிய திருக்குறள் இந்தி மொழி பெயர்ப்பு வெளியிடப் பெறுதற்கு, மொழிபெயர்க்கச் செய்தும், அச்சிடுவித்து அருளியும் பல்லாற்றானும் உதவிகள் அருளிய **ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிநெறிவிளக்கம், கந்தர் கலிவெண்பா, சகலகலாவல்லிமாலை, சிவஞான சித்தியார் சுபக்கம் ஆகிய நூல்களின் இந்தி மொழி பெயர்ப்பு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அருளாதரவில் வெளிவந்துலவுதல் நாம் அறிவோம். இங்ஙனமே இவ்விந்திமொழி பெயர்ப்பையும் இந்தி மொழி அன்பர்கள் ஏற்றுத் திருக்குறள் பூங்கோத்தின் மணம் நுகர்வாராக!

இப்பதிப்பிற் காணும் குறிப்புரைகள் அப்போதைக்கப்போது வழங்கி பேருதவி செய்த திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்ஸிபால் **ஸ்ரீ K. M. வேங்கட்ட ராமய்யா** M. A. B. O. L. அவர்கட்கு இச்சங்கத்தின் மனமார்ந்த நன்றியும் உரித்து.

அன்பன்

ஸ்ரீவைகுண்டம், 17—7—52.

T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,
நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்.

# அறத்துப்பால்

## பாயிரவியல்

## 1. கடவுள் வாழ்த்து

1. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

3. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

7. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

8. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

9. கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

10. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

பொருள்:— 1. முதற்று – முதலாகவுடையது. 2. வாலறிவன் – மெய்யுணர்வினை உடையான். 3. நிலமிசை—எல்லாவுலகிற்கும் மேலாய வீட்டுலகின் கண் (நிலத்தின் மேல் என்றும் பொருள் கூறுவர்.) 4. இடும்பை - பிறவித்துன்பம். 5. புரிந்தார் மாட்டு – விரும்பினாரிடத்து. 6. பொறி வாயில் ஐந்து – ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. 8. அறவாழி – அறக் கடல்; பிற – பொருளும் இன்பமும். 9. பொறியில் – பொறிகள் போல; குணமில – பயன்படுதலுடைய வல்ல.

# 2. வான் சிறப்பு

11. வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

14. ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

15. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

16. விசும்பிற் றுளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

17. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

19. தானம் தவம்இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

பொருள்:- 11. வான் நின்று-மழையினாலே. 12. துப்பார்-உண்பார்; துப்பு (ஆக்கி) - உணவு; துப்புஆயதூஉம் - உண்வாய் நிற்பதும். 13. விண் இன்று - மழை பெய்யாது; உடற்றும்-வருத்தும். 14. புயல்-மழை; வாரி - வருவாய்; வளம் - பயன். 17. நீர்மை - இயல்பு; குன்று - குறையும்; எழிலி - மேகம். 18. சிறப்பு - விழா.

# 3. நீத்தார் பெருமை

21. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

22. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

24. உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

25. ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

30. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

பொருள்:– 21. பனுவல்–நூல்கள். 23. இருமைவகை–பிறப்பு வீடு என்னும் இரண்டினது கூறுபாடு; பிறங்கிற்று–உயர்ந்தது. 24. உரன்–அறிவு; தோட்டி – அங்குசம்; வரன்என்னும் வைப்பிற்கு – மோட்சம் என்னும் பூமிக்கு. 25. விசும்புளார்–தேவர்; கரி–சாட்சி. 26. அறிவான் கட்டே – அறிபவன் இடத்தில். 28. நிறை மொழி மாந்தர் – துறந்தார்; மறைமொழி–(அவர் ஆணையாற் சொல்லிய) மந்திரம். 30. அறவோர்–துறவறத்தில் நின்றவர்.

# 4. அறன்வலியுறுத்தல்

31. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு.

32. அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

33. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

34. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

35. அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

36. அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

37. அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை.

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

39. அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல.

40. செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி.

பொருள்:– 31. சிறப்பு–முத்தி; ஈனும்–தரும்; ஊஉங்கு (ஊங்கு)–மேல்; எவன் – யாது? 33. ஒல்லும் வகையான் – இயன்ற அளவு; ஓவாதே-இடைவிடாமல். 34. ஆதல்–ஆகுக; பிற-சொல்லும் வேடமும்; ஆகுலநீர–ஆரவாரத்தன்மை உடையன. 35. அழுக்காறு–பொறாமை; இழுக்கா – நீக்கி. 36. அன்று அறிவாம் – இறக்கும்பொழுது அல்லது செல்வம் உண்டானபோது செய்வோம்; பொன்றுங்கால் – இறக்கும் பொழுது; பொன்றா – அழியாத. 37. ஆறு – பயன். 38. வீழ்நாள் படாமை – இடைவிடாமல்; நன்று – அறம்; ஆற்றின் – செய்தால்; வாழ்நாள் வழி – பிறக்கும்நாள் வரும்வழி. 39. புறத்த – துன்பமாம். 40. ஓரும் என்பன இரண்டும் அசைநிலை.

# 5. இல்வாழ்க்கை

41. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

42. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

43. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான்என்றாங்
கைம்புலத்தா றோம்பல் தலை.

44. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

45. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

46. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்.

47. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாந் தலை.

48. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

49. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

பொருள் ;— 41. மூவர் – பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி, 42. துவ்வாதவர் – ஏழைகள், 43. தென்புலத்தார் – பிதிரர்; ஒக்கல் – சுற்றத்தார்; தலை – சிறப்புடைய அறம். 44. பாத்து–பகுத்து; ஊண்– உண்ணுதல்; வழி – சந்ததி; எஞ்சல் – குறைபட்டு ஒழிதல். 46. ஆற்றின் – செலுத்தினால்; புறத்தாறு – தவநெறி; (போஒய் – போய்), எவன் – யாது. 47. முயல்வார்–புலன்களை விட முயல்பவர். 48. ஆற்றின் ஒழுக்கி – தவம் செய்வாரைத் தத்தம் நெறியிலே ஒழுகுமாறு செய்து. 49. அஃது – துறவறம்; பிறன்பழிப்பது – கூடாவொழுக்கம்.

# 6. வாழ்க்கைத்துணை நலம்

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

52. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

53. இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை.

54. பெண்ணிற் பெருந்தக்க யாஉள கற்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

56. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

57. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை.

58. பெற்றான் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

59. புகழ்புரிந் தில்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.

60. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.

பொருள்:- 51. மாண்பு-நற்குண நற்செய்கைகள்; தற்கொண்டான்-கணவன்; வளத்தக்காள் – வருவாய்க்குத் தக்க செலவினையுடையவள். 54. பெருந்தக்க – மேம்பட்ட பொருள். 55. கொழுநன் – கணவன். 56. தகைசான்ற சொல்–நன்மையமைந்த புகழ். 57. எவன் செய்யும்–என்ன பயனைச் செய்யும்; நிறை–நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல். 58. பெற்றான் பெறின்–கணவனை வழிபடின். 59. புகழ் புரிந்த இல் – புகழை விரும்பிய மனைவி; ஏறு – ஆண்சிங்கம்; பீடு – பெருமிதம்.

# 7. புதல்வரைப்பெறுதல்

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

62. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

63. தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.

64. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

65. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு

66. குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

67. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

68. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

70. மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

பொருள் :— 62. தீயவை – துன்பம், பழி பிறங்கா – பிறரால் பழிக்கப்படாத. 67 முந்தி யிருப்பச் செயல்—மிக்கு இருக்குமாறு கல்வி உடையன் ஆக்குதல். 69 உவக்கும்—மகிழும், சான்றோன்—கல்வி கேள்விகளில் நிறைந்தவன். 70. சொல் – சொல்லை நிகழ்த்துதலை.

# 8. அன்புடைமை

71. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

72. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

73. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

74. அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்துஞ் சிறப்பு.

76. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்.

78. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

79. புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

80. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

பொருள் :- 71. ஆர்வலர்—அன்புடையவர், பூசல்தரும்—(அன்பினை) எல்லாரும் அறிய வெளிப்படுத்தும். 73. என்போடு இயைந்த வழக்கு—உடம்போடு உண்டாகிய தொடர்ச்சி. 74. ஆர்வம் – விருப்பம், ஈனும்—தரும். 76. சார்பு – துணை, அஃது – அன்பு. 77. என்பு இலதனை – உடம்பை, அன்பு இலதனை—அன்பு இல்லாத உயிரை. 78. வன்பால்—வலியநிலம், வற்றல் மரம் – உலர்ந்த மரம்.

# 9. விருந்தோம்பல்

81. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

83. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

84. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல்.

85. வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலம்.

86. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

88. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

89. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

90. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

பொருள் :- 81. ஓம்பி – போற்றி; வேளாண்மை – உபகாரம். 82. சாவாமருந்து – அமிர்தம். 83. வைகலும் – ஒவ்வொருநாளும்; பருவந்து – வருந்தி; இன்று – இல்லை. 84. செய்யாள் – திருமகள்; அகன்அமர்ந்து – மனம்மகிழ்ந்து. 85. மிச்சில் – எஞ்சியஉணவு; மிசைவான் – உண்பவன். 86. செல்விருந்து – விருந்தாய் வந்தவர்; வருவிருந்து – விருந்தாய் வருபவர். 87. இனைத்துணைத்து – இன்ன அளவினையுடையது; (துணை – அளவு); வேள்வி – விருந்தோம்பல், 88. பரிந்து ஓம்பி - வருந்திக் காத்து; பற்று - ஊன்றுகோல்; வேள்வி- வேளாண்மை. 89. மடவார் – அறிவிலார். 90. அனிச்சம் – ஒருமலர்.

# 10. இனியவைகூறல்

91. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

92. அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

93. முகத்தான் அமர்ந்தினிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே யறம்.

94. துன்புறூஉந் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

95. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்
கணியல்ல மற்றுப் பிற.

96. அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

97. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

98. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும்.

99. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

100. இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.

பொருள் :- 91. ஈரம் அளைஇ – அன்போடு கலந்து; படிறு – வஞ்சனை; செம்பொருள் – அறம். 94. துன்பு உறூஉம் – துன்பத்தை மிகுவிக்கும்; துவ்வாமை – வறுமை. 95. மற்று – அசைநிலை; பிற – பிற அணிகள். 96. அல்லவை – அறம் அல்லாதவை, பாவம். 97. நயன் – நீதி; நன்றி – அறம்; பயன் – நன்மை; தலைப்பிரியா – நீங்காத. 98. சிறுமை – துன்பம், குற்றம்.

# 11. செய்ந்நன்றியறிதல்

101. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

102. காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

103. பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலில் பெரிது.

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

105. உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு.

107. எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு.

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

109. கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

110. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

பொருள் :— 101. வையகம் – நிலவுலகம்; ஆற்றல் – ஒத்தல். 102. காலத்தினால் – உதவி வேண்டும்காலத்து; ஞாலம் – நிலவுலகம்; மாணப்பெரிது – மிகப்பெரிது. 103. தூக்கார் – ஆராயாமல். 104. துணை – அளவு. 105. வரைத்துஅன்று – அளவன்று; சால்பு – தகுதி. 106. மறவற்க – விடாதே; கேண்மை – நட்பு; துப்பு – ஊன்றுகோல், வலி; ஆயார் – ஆனவர். 107. உள்ளுவர் – நினைப்பர்; விழுமம் – துன்பம்; (விழும்அம் – விழும்கண்ணீர்) 108. நன்றல்லது– தீமை.

# 12. நடுவுநிலைமை

111. தகுதி எனஒன்று நன்றே பகுதியால்
பாற்பட் டொழுகப் பெறின்.

112. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

113. நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

114. தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்.

115. கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

116. கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

117. கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

118. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி. [பால்

119. சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

120. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்.

பொருள் :— 111. தகுதி – நடுவுநிலைமை; பகுதியால் – பகை நொதுமல் நட்பு என்னும் பகுதிதோறும்; (பாற்பட்டு – நடுவுநிலைமை தவறாது). 112. செப்பம் – நடுவுநிலைமை; ஆக்கம் – செல்வம்; எச்சம்– சந்ததி; ஏமாப்பு – வலிமை, காவல். 113. நடுவு இகந்துஆம் – நடுவு நீங்குவதால் உண்டாகிற; விடல் – விடுக. 114. தக்கார் – நடுவுநிலைமை யுடையவர்; எச்சம் – மக்கள். 115. இல்லல்ல – உண்டு. 116. ஓரீஇ– நீங்கி. 117. கெடு – கேடு, வறுமை; உலகம் வையாது – உயர்ந்தோர் கருதார்; தாழ்வு – வறுமை. 118. கோல் – துலாக்கோல்; அணி – அழகு. 119. செப்பம் – நடுவுநிலைமை; ஒருதலையா – உறுதியாக. 120. பிறவும் தமபோல் செய்தலாவது கொள்வது மிகையும் கொடுப்பது குறையும் ஆகாமல் செய்தல்.

# 13. அடக்கமுடைமை

121. அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்.

122. காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

123. செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்.

124. நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

125. எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து

126. ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

127. யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு.

128. ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

129. தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு.

130. கதம்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.

பொருள்:- 121. இருள்-நரகம். 122. ஊங்கு-மேல். 123. செறிவு-அடக்கம், அறிந்து – நல்லோரால் அறியப்பட்டு, சீர்மை – நன்மை. 125. செல்வந்தகைத்து – வேறொரு செல்வமாம் சிறப்பினையுடையது. 126. ஒருமை-ஒரு பிறப்பு, எழுமை – ஏழுபிறப்பு, ஏமாப்புடைத்து-காவல் ஆதலையுடையது (துன்பம் இல்லையாம்). 127. யா – எல்லாவற்றையும், சோகாப்பர்–துன்பம் அடைவர். 128. தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் — தீச்சொல்லின் பொருளைப் பயக்குமாயின். 129. கதம் – கோபம், செவ்வி – தன்குறை கூறுதற்கு ஏற்ற மனம் மொழி முகங்கள் இனியனாங்காலம்.

# 14. ஒழுக்கமுடைமை

131. ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

132. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

133. ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

134. மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.

135. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

136. ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

137. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

138. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

139. ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்.

140. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

பொருள் :- 131. விழுப்பம் – சிறப்பு. 132. பரிந்து — வருந்தி. 133. குடிமை — குலனுடைமை, (குடிப்பிறப்பிற்கு ஏற்ற ஒழுக்கம்), இழுக்கம்–(ஒழுக்கத்தில்) தவறுதல். 134. ஓத்து–வேதம். 135. அழுக்காறு – பொறாமை. 136. ஒல்கார் – சுருங்கார், நீங்கார், உரவோர் – மனவலியுடையோர், அறிவுடையோர். 138. இடும்பை — துன்பம். 139. ஒல்லாவே – முடியாது, வழுக்கியும் – மறந்தும். 140. ஒட்ட – பொருந்த.

# 15. பிறனில்விழையாமை

141. பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
அறம்பொருள் கண்டார்கண் இல்.

142. அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்.

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்
தீமை புரிந்தொழுகு வார்.

144. எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்.

145. எளிதென இல்இறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

146. பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.

147. அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.

149. நலக்குரியார் யார்எனின் நாமநீர் வைப்பில்
பிறற்குரியாள் தோள்தோயா தார்.

150. அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

பொருள் :- 141. பொருளாள் – மனைவி (யை), பெட்டு-விரும்பி. 142. அறன் கடைநின்றார் — காமம் காரணமாகப் பாவத்தின்கண் நின்றார். 143. விளிந்தார் – செத்தார், மன்ற-மெய்யாக. தெளிந்தார் இல்–ஐயுறாதார் மனைவியிடத்து; புரிந்து–விரும்பி. 146. இகவாவாம்–நீங்கா. 147. பிறன் இயலாள்–பிறன் மனைவி. 148. ஆன்ற–நிரம்பிய. 149. நலக்குரியார் – நன்மைகள் அடைவதற்குரியவர். நாமநீர்வைப்பு – அச்சம்தரும் கடல்சூழ்ந்த உலகம். 150. அல்ல – பாவங்கள், பிறன் வரையாள் – பிறன் மனைவி.

# 16. பொறையுடைமை

151. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

152. பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

153. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

154. நிறைஉடைமை நீங்காமை வேண்டின் பொறை
போற்றி ஒழுகப் படும். [உடைமை

155. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

156. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.

157. திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்
தறன்அல்ல செய்யாமை நன்று.

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

159. துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

பொருள் :— 152. பொறுத்தல் – பொறுப்பாயாக, இறப்பினை – பிறர்செய்த மிகையை, (மிகை – குற்றம்). 153. ஒரால் – நீக்குதல், மடவார்ப்பொறை–மிகைசெய்தாரைப் பொறுத்தல். 156. ஒறுத்தார்– துன்பம் செய்தார், பொன்றும் துணையும்–(உலகம்) அழியும் அளவும். 157. திறனல்ல–செய்யத்தகாதவை; தன் – தன் இடத்து; நோநொந்து– (அவர்க்குவரும்) துன்பத்திற்கு நொந்து. 158. மிகுதி – மனச்செருக்கு; மிக்கவை – தீயவை; தகுதி – பொறுமை. 159. இறந்தார் – நெறியைக் கடந்தார்; நோற்கிற்பவர் – பொறுப்பவர். 160. நோற்பார் – (உற்ற நோய்) பொறுப்பவர்.

# 17. அழுக்காறாமை

161. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு.

162. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.

163. அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

164. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து.

165. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.

167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.

168. அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.

169. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

170. அழுக்கற் றகன்றாரும் இல்லைஅஃ தில்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.

**பொருள் :–** 161. அழுக்காறாமை — பொறாமையால் வரும் மனக் கோட்டத்தைச் செய்யாமை; அழுக்காறு – பொறாமை. 162. அழுக் காற்றின் அன்மை – அழுக்காறு செய்யாமை. 163. அழுக்கறுப்பான்– அழுக்காறு செய்வான். 164. இழுக்குஆற்றின் — தீநெறியால்; படுபாக்கு – வருதல். 165. ஒன்னார் – பகைவர்; வழுக்கியும் – தப்பியும். 167. அவ்வித்து – பொறாது; செய்யவள் – திருமகள்; தவ்வை – மூத்தவள். 168. திரு – செல்வம்; செற்று – கெடுத்து; தீயுழி – நரகத்தில். 169. அவ்விய – பொறாமையுடைய. 170. அகன்றார் – பெரியர் ஆயினார்; பெருக்கம் – செல்வம்.

# 18. வெஃகாமை

171. நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும்.

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

173. சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

174. இலம்என்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

175. அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

176. அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

177. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

178. அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

179. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந் தாங்கே திரு.

180. இறல்ஈனும் எண்ணாது வெஃகின் விறல்ஈனும்
வேண்டாமை என்னும் செருக்கு.

பொருள் :- வெஃகாமை – பிறர்பொருளை விரும்பாமை. 171. நடு– நடுவுநிலைமை; பொன்றி - கெட்டு. 172. வெஃகி - விரும்பி; பழிப்படுவ- பழியுண்டாவன. 174. புன்மையில் – குற்றம் இல்லாத. 175. அஃகி அகன்ற – நுண்ணிதாகப் பரந்த; வெறிய – அறிவோடு பொருந்தாத செயல்கள். 176. ஆற்றின்கண் – இல்லற நெறியிலே. 177. வெஃகி ஆம் ஆக்கம்; ஆம் – ஆகின்ற; விளைவயின் – அனுபவிக்கும்பொழுது; மாண்டற்கு அரிதாம் – நன்றாதல் இல்லை. 178. அஃகாமை – சுருங் காமைக்குக் காரணம்; செல்வத்திற்கு யாது. 180. இறல் – இறுதி, கேடு; விறல் – வெற்றி; செருக்கு – செல்வம், பெருமிதம்.

# 19. புறங்கூறாமை

181. அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.

182. அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறன்அழீஇப் பொய்த்து நகை.

183. புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.

185. அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்
புன்மையாற் காணப் படும். [சொல்லும்

186. பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

188. துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.

189. அறன்நோக்கி ஆற்றும்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.

190. ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

பொருள்:— புறங்கூறாமை — காணாத வழிப்பிறரை இகழ்ந்து சொல்லாமை. 181. அல்ல — பாவம். 182. அழீஇ — அழித்து. 184. கண்ணின்று - ஒருவன் எதிரே நின்று; கண் (அற) – கண் – கண்ணோட்டம் – தாட்சணியம், முன்இன்று – எதிரில் இல்லாதபொழுது; பின் — பின்வரும் குற்றம். 185. அன்மை — அல்லன் என்பது. 187. பக – நீங்கும்படி, கேளிர் – உறவினர்; தேற்றாதவர் – அறியாதவர். 188. துன்னியார் – தம்மோடு சேர்ந்தார்; மரபினார் – இயல்பினையுடையார்; ஏதிலார் – பகைவர். 189, ஆற்றுங்கொல் – பொறுக்கின்றது போலும்; வையம் – உலகம்; பொறை – உடல்பாரம். 190. காண்கிற்பின் – காணவல்லவர் ஆயின்.

# 20. பயனிலசொல்லாமை

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

192. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

193. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

194. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து.

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை உடையார் சொலின்.

196. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்.

197. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

198. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

199. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

200. சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல்.

பொருள் :- 191. எல்லாரும் – எல்லாராலும். 192. நயன் இல– விருப்பம் இல்லாத செயல்கள். 193. நயன் – நீதி; பாரித்து – பிரித்து; 194. பல்லாரகத்து – பலர்இடத்துக் கூறுவான் ஆயின். 195. சீர்மை– ஒழுக்கம். 196. மகன்எனல் – மகன் என்று சொல்லாதே, பதடி எனல் – மக்களில் பதர் என்று சொல்லுக. 198. ஆயும் – ஆராயும். 199. பொருள்தீர்ந்த — பயன் இல்லாத சொல்; பொச்சாந்தும் — மறந்தும்; மருள் – மயக்கம்; காட்சியவர் – மெய்யறிவு உடையவர். 200. சொல்லின் – சொற்களில், சொல்லவேண்டுமானால்.

# 21. தீவினையச்சம்

201. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

202. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

203. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

205. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து.

206. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

207. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

208. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று.

209. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

210. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

பொருள் :- 201. செருக்கு – மயக்கம்; விழுமியார் – பெரியோர். 203. செறுவார் — தமக்குத் தீமை செய்வார்; செய்யா — செய்யாது. 206. தீப்பால – தீயவை; நோய்ப்பால – துன்பம்செய்யும் பாவங்கள்; அடல் – வருத்துதல். 207. வீயாது – நீங்காது; அடும் – கொல்லும். 208. அடியுறைந்தற்று — அடியின்கண் தங்கிய தன்மைத்து. 209. துன்னற்க – செய்யாது ஒழிக. 210. அருங்கேடன் – கேடு இல்லாதவன்; மருங்கு – தீயவழி.

# 22. ஒப்புரவறிதல்

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு.

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

213. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

214. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

215. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

216. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

218. இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

219. நயன்உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயும்நீர
செய்யா தமைகலா ஆறு.

220. ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.

பொருள் :- ஒப்புரவு அறிதல் - உலகநடையினை அறிந்து செய்தல். 211. கடப்பாடு — ஒப்புரவு, மாரி — மேகம். 212. தாள்ஆற்றி — முயற்சிசெய்து, தந்த-ஈட்டிய, வேளாண்மை-உதவி. 213. புத்தேள்-தேவர், ஈண்டும் — இவ்வுலகத்தும். 214. ஒத்தது — ஒப்புரவு; 215. ஊருணி - ஊரில்வாழ்வார் தண்ணீர் உண்ணும்குளம். 216. நயன் உடையான் — ஒப்புரவு செய்வான். 218. இடன் — செல்வம், கடன் அறிகாட்சியவர் — செய்யத்தக்கவை அறிந்த இயற்கையுடையவர். 219. நல்கூர்ந்தான் — ஏழை, செயும்நீர — செய்யவேண்டிய ஒப்புரவுகள், ஆறு — இயல்பு. 220. கோள்தக்கது உடையது — கொள்ளும் தகுதியை உடையது.

# 23. ஈகை

221. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

222. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே நன்று.

223. இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள.

224. இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு

225. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

226. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.

228. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

229. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

230. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

பொருள் :— 221. குறிஎதிர்ப்பை – அளவு குறித்து வாங்கி அவ் வாங்கியவாறே கொடுப்பது. 222. நல்லாறு – வீட்டுலகிற்கு நல்ல நெறி. 223. இலன் – வறியன், எவ்வம் – துன்பம், இக்குறட்குப் பல உரைகள் உண்டு. 225. ஆற்றுவார் — தவத்தான் வலிமை உடையவர். 226. அற்றார் – வறியார், அழிபசி – மிக்க பசி, வைப்புழி- தேடினபொருள் வைத்தற்குரிய இடம். 227. பாத்து — பகுத்து, மரீஇயவன் – பழகியவன். 228. தாம் உடைமை – தாம் உடைய பொருள், வன்கணவர் - அருள் இல்லாதவர். 229. மன்ற - உறுதியாக, நிரப்பிய — தேடியஉணவு, தமியர் — தனித்து. 230. அதூஉம் — அச் சாதலும், இயையாக்கடை – முடியாதவழி.

# 24. புகழ்

231. ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு.

232. உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ்.

233. ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்.

234. நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

235. நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.

236. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

237. புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.

238. வசைஎன்ப வையத்தார்க் கெல்லாம் இசைஎன்னும்
எச்சம் பெறாஅ விடின்.

239. வசைஇலா வண்பயன் குன்றும் இசைஇலா
யாக்கை பொறுத்த நிலம்.

240. வசைஒழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய
வாழ்வாரே வாழா தவர்.

பொருள் :- 231. இசைபட — புகழ்உண்டாக, அது — புகழ், ஊதியம் — பயன். 233. ஒன்றா — தன்னோடு ஒப்பது இல்லாமல், பொன்றாது – அழியாது. 234. நிலவரை – நிலஎல்லை, ஆற்றின் – செய்தால், புலவரை – தேவர்களை. 235. நத்தம் – புகழ்உடம்பு, சாக்காடு – சாதல், வித்தகர் – அறிஞர். 236. அஃது – புகழுக்கு ஏதுவாகிய குணம். 237. நோவார் – நோவாமல், எவன் – எதுகருதி. 238. இசை — புகழ். 239. வசை — பழி, யாக்கை — உடம்பு, பொறுத்த — சுமந்த.

துறவறவியல்

# 25. அருளுடைமை

241. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

242. நல்லாற்ருன் நாடி அருளாள்க பல்லாற்ருன்
தேறினும் அஃதே துணை.

243. அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னு உலகம் புகல்.

244. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

245. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலம் கரி.

246. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

247. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.

248. பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ருர்
அற்ருர்மற் ருதல் அரிது.

249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்ருல் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.

250. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.

பொருள் :— 241. பூரியார் – இழிந்தார். 243. புகல் – புகுதல். 245. ஆள்வார் – உடையார், வளி – காற்று, மல்லல் – வளம், கரி – சான்று. 246. அல்லவை — கொடுமைகள், பொருள் — உறுதிப் பொருள் – அறம், பொச்சாந்தார் – மறந்தவர். 247. அவ்வுலகம் – வீட்டுலகத்து இன்பம், இல்லாகியாங்கு — இல்லையானுற்போல. 248. பூப்பர் – செல்வத்தால் பொலிவர். 249. தெருளாதான் – ஞானம் இல்லாதவன், தேரின் – ஆராய்ந்தால். 250. தன்னை – தான் அஞ்சி நிற்கும் நிலையை.

# 26. புலான்மறுத்தல்

251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்.

252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.

253. படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா
உடல்சுவை உண்டார் மனம். [தொன்றன்

254. அருளல்ல தியாதெனின் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.

255. உண்ணாமை உள்ள துயிர்நிலை ஊன்உண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

256. தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

258. செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரின் தலைப்பிரிந்த ஊன்.

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

பொருள் :- 252. பொருள் ஆட்சி - பொருளால் பயன்கொள்ளுதல், போற்றாதார்க்கு—பாதுகாவாதவர்க்கு, ஆங்கு - அதுபோல. 253. படை - கொலைக்கருவி, நன்றூக்காது - அருளை நோக்காது. 254. அருள் கொல்லாமை, அருளல்லது கோறல், கோறல் — கொல்லுதல், பொருளல்லது - பாவம். 255. அளறு - நரகம். 256. புலாஅல் - புலால். 258. செயிர் - குற்றம், தலைப்பிரிந்த - நீங்கிய, காட்சியார் - அறிவினையுடையவர். 259. வேட்டலின்—யாகம்செய்தலைக் காட்டிலும், செகுத்து - போக்கி.

# 27. தவம்

261. உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

262. தவமும் தவம்உடையார்க் காகும் அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது.

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

264. ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணின் தவத்தான் வரும்.

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

266. தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.

267. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

268. தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்.

269. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.

270. இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

பொருள் :- 261. நோன்றல் – பொறுத்தல், உறுகண் – துன்பம், உரு — வடிவு. 262. அவம் — பயனில்முயற்சி. 263. துப்புரவு — உணவும் மருந்தும் உதவுதல், ஒன்னார் — (அறத்திற்குப்) பகைவர், தெறல் – கெடுத்தல். 266. மற்று அல்லார் – பொருள் இன்பங்களைச் செய்வார். 267. சுடரும் – ஓடும், ஒளிவிடும் – (பாவம் நீங்கி) ஞானம் மிகும், நோற்கிற்பவர்க்கு — தவம் செய்யவல்லார்க்கு. 268. அறப் பெற்றான் – தனக்கு உரியதாகப்பெற்றான், மன்உயிர் – நிலைபெற்ற உயிர். 269. கூற்றம் குதித்தல் — யமனைக்கடத்தல். 270. இலர் — பொருள் இல்லாதவர்.

# 28. கூடாவொழுக்கம்

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

274. தவமறைந்து அல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

278. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

பொருள் :– 271. படிற்றொழுக்கம் – மறைந்தஒழுக்கம். 272. எவன் செய்யும் – என்னபயனைச் செய்யும். 273. வல்லுருவம் – வலிதாகிய தவஉருவம் கொள்ளுதல், பெற்றம் – பசு. 274. புள்சிமிழ்த்தற்று – பட்சிகளைப்பிணிப்பது போலும். 275. எற்று – என்செய்தேம், ஏதம்– துன்பம். 276. வன்கணார் இல் – வஞ்சகர் இல்லை. 277. புறங்குன்றி– குன்றியின் புறம், குன்றி – குண்டுமணி, கண்டு அனையர் ஏனும் – கண்டாற்போல வேடத்தால் செம்மைஉடையர் ஆயினும், அகம் கரியார் – மனம் இருண்டு இருப்பார். 278. மாண்டார் – மாட்சியுடையவர். 279. கணை — அம்பு, வினைபடு பாலால் — செய்கையால், கொளல் – அறிந்துகொள்க.

# 29. கள்ளாமை

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.

284 களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

பொருள் :- 281. எள்ளாமை – வீட்டினை இகழாது. 283. ஆவது– வளர்வது, அளவிறந்து – எல்லையைக்கடந்து. 284. கன்றியகாதல் – மிக்கஆசை, வீயா – கெடாத, விழுமம் – துன்பம். 285. பொச்சாப்புப் பார்ப்பார் – சோர்வுபார்ப்பவர். 286. அளவு – உயிர்முதலியவற்றை அளத்தலாகிய நெறி. 287. காரறிவாண்மை — மயக்க அறிவினை உடையராய் இருத்தல். 288. கரவு – வஞ்சனை. 289. அளவு அல்ல– தீய நினைவுகள், செய்தாங்கே – நினைத்தபொழுதே, வீவர் – கெடுவர், தேற்றாதவர் – அறியாதவர். 290. உயிர்நிலை – உடம்பு, தள்ளும் – தவறும், புத்தேள் – தேவர்.

# 28. கூடாவொழுக்கம்

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

273. வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

274. தவமறைந்து அல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

275. பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவும் தரும்.

276. நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

277. புறங்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி
மூக்கில் கரியார் உடைத்து.

278. மனத்தது மாசாக மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகும் மாந்தர் பலர்.

279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.

280. மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்த தொழித்து விடின்.

பொருள் :— 271. படிற்றொழுக்கம் – மறைந்தஒழுக்கம். 272. எவன் செய்யும் – என்னபயனைச் செய்யும். 273. வல்லுருவம் – வலிதாகிய தவஉருவம் கொள்ளுதல், பெற்றம் – பசு. 274. புள்சிமிழ்த்தற்று – பட்சிகளைப்பிணிப்பது போலும். 275. எற்று – என்செய்தேம், ஏதம்– துன்பம். 276. வன்கணார் இல் – வஞ்சகர் இல்லை. 277. புறங்குன்றி– குன்றியின் புறம், குன்றி – குண்டுமணி, கண்டு அனையர் ஏனும் – கண்டாற்போல வேடத்தால் செம்மைஉடையர் ஆயினும், அகம் கரியார் – மனம் இருண்டு இருப்பார். 278. மாண்டார் – மாட்சியுடையவர். 279. கணை — அம்பு, வினைபடு பாலால் — செய்கையால், கொளல் – அறிந்துகொள்க.

# 29. கள்ளாமை

281. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

282. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

283. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.

284. களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

285. அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

286. அளவின்கண் நின்றொழுகல் ஆற்றார் களவின்கண்
கன்றிய காத லவர்.

287. களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல்.

288. அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு.

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

290. கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு.

பொருள் :– 281. எள்ளாமை – வீட்டினை இகழாது. 283. ஆவது– வளர்வது, அளவிறந்து – எல்லையைக்கடந்து. 284. கன்றியகாதல் – மிக்கஆசை, வீயா – கெடாத, விழுமம் – துன்பம். 285. பொச்சாப்புப் பார்ப்பார் – சோர்வுபார்ப்பவர். 286. அளவு – உயிர்முதலியவற்றை அளத்தலாகிய நெறி. 287. காரறிவாண்மை — மயக்க அறிவினை உடையராய் இருத்தல். 288. கரவு – வஞ்சனை. 289. அளவு அல்ல– தீய நினைவுகள், செய்தாங்கே – நினைத்தபொழுதே, வீவர் – கெடுவர், தேற்றாதவர் – அறியாதவர். 290. உயிர்நிலை – உடம்பு, தள்ளும் – தவறும், புத்தேள் – தேவர்.

# 30. வாய்மை

291. வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

292. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

293. தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

294. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.

296. பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

298. புறம்தூய்மை நீரான் அமையும் அகம்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

300. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

பொருள் :- 291. வாய்மை – மெய்ம்மை – உண்மை, சொலல் – சொல்லுதல். 292. புரை – குற்றம். 296. எய்யாமை – வருந்தாமல். 297. பொய்யாமையை இடைவிடாது செய்யின் பிற அறம் செய்ய வேண்டியதில்லை. 298. அகம் — மனம், காணப்படும் — உண்டாம். 299. பொய்யாவிளக்கு – பொய்யாமையாகிய விளக்கு.

# 31. வெகுளாமை

301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்
காக்கினென் காவாக்கால் என். [அல்லிடத்துக்

302. செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

305. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

306. சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்.

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

308. இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

309. உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.

310. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

பொருள் :- 301. செல்இடம் — பலிக்கும் இடம் — தவத்தால் தன்னின் மெலியார், அல்இடம் — பலியாத இடம் — தவத்தால் தன்னின் வலியார். 303. மறத்தல் – செய்தல் ஒழிக. 305. கொல்லும்- கடுந்துன்பங்களை எய்துவிக்கும். 306. சேர்ந்தாரைக் கொல்லி — நெருப்பு, இனம் – முற்றத்துறந்து தவஞானங்களால் பெரியராய்க் கேட்டார்க்கு உறுதிமொழிகளை இனியவாகச் சொல்லுவார். ஏமப் புணை – ஏமத்தை உபதேசிக்கும் தெப்பம், ஏமம் — அருள், பொறை முதலியன. 307. பொருள் – குணம். 308. இணர்எரி – பேரெரி, எரி — நெருப்பு, வெகுளாமைபுணரின் — வெகுளாமை கூடுமாயின். 309. உள்ளியது — நினைத்தது. 310. இறந்தார் — சினம்மிக்கவர், இறந்தார் – செத்தார், துறந்தார் துணை – வீடுபெற்றாரோடொப்பர்.

# 32. இன்னா செய்யாமை

311. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

312. கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

313. செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

314. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

315. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை.

316. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

317. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை.

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

319. பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

320. நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம்
நோயின்மை வேண்டு பவர். [நோய்செய்யார்

**பொருள் :—** **311.** சிறப்பு ஈனும் செல்வம் — யோகமாகிய சிறப்புத் தரும் அணிமா முதலிய எட்டுச்சித்திகள், மாசு அற்றார்கோள் — மனம் தூயார் துணிவு. **312.** கறுத்து — கோபித்து, செய்தவக்கண்ணும் — செய்த இடத்தும். **313.** செய்யாமல் — செய்யாதிருக்க, செய்தபின் — செய்தால். **314.** நன்னயம் — இனியசெயல்கள், விடல் — (பிறர்செய்த இன்னாமையையும், தான் செய்த நன்மையையும்) மறத்தல். **316.** செயல்துன்னாமை — செய்யாமை. **317.** மாணா — இன்னாத செயல்கள்.

# 33. கொல்லாமை

321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

322. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

324. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழு நெறி.

325. நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் [வாழ்நாள் மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

327. தன்உயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்உயிர் நீக்கும் வினை.

328. நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை.

329. கொலைவினையர் ஆகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவார் அகத்து.

330. உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

பொருள்:– 321. பிறவினை – பாவச்செய்கைகள்; கோறல் – கொல்லுதல். 325. நிலையஞ்சி நீத்தார் – பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தார். 328. நன்று ஆகும் ஆக்கம் – வேள்விக்கண் கொன்றால் இன்பம் மிகும் செல்வம். 329. வினையர் – தொழிலையுடையர். 330. செயிர்உடம்பு – நோக்கலாகா நோயுடம்பு; செல்லா – வறுமைமிக்க.

ஞானம்

# 34. நிலையாமை

331. நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

333. அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.

334. நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

335. நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

336. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

338. குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

339. உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

340. புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு.

பொருள்:— ஞானம்— வீடுபயக்கும் உணர்வு. 331. புல்லறி வாண்மை- புல்லிய அறிவினை உடையராதல்; கடை — இழிபு. 332. விளிந்தற்று— போவதுபோலும். 333. அற்கா — நில்லாத; அற்குப — செய்யப்படும் அறங்கள்; ஆங்கே செயல் — அப்பொழுதே செய்க. 334. ஈரும் வாளது உயிர்-ஈர்ந்து செல்கின்ற வாளினது வாயது உயிர். 335. செற்று—அடக்கி, வாராமுன் — வருவதற்குமுன். 336. நெருநல் — நேற்று; பெருமை உடைத்து-நிலையாமை மிகுதியை உடையது. 338. குடம்பை-முட்டை, கூடு. 339. சாக்காடு—சாதல். 340. புக்கில்—என்ஞான்றும் இருப்பதோர் இல்; அமைந்தின்று கொல் — அமைந்தது இல்லை போலும்; துச்சில் இருந்த—ஒதுக்குக்குடி இருந்த.

# 35. துறவு

341. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

342. வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல.

343. அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு.

344. இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து.

345. மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பு மிகை.

346. யானெனை தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்.

347. பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பொருள்:– 341. யாதனின் – யாதொரு பொருளின்; நோதல் இலன் – துன்புறுதல் இல்லை. 342. வேண்டின் – இன்பம் வேண்டின்; இயற்பால – உளவாம் இன்பங்கள். 343. அடல் – கெடுத்தல். 344. நோன்பிற்கு – தவம் செய்வார்க்கு; மயல் ஆகும் – மயங்குதற்கு ஏது வாகும். 346. செருக்கு – மயக்கம். 347. விடாஅ– விடா; இடும்பைகள் – பிறவித்துன்பங்கள். 348. தலைப்பட்டார்– முத்தியை அடைபவர்; வலைப்பட்டார் – பிறப்பாகிய வலையுட்பட்டார். 350. பற்றற்றான் பற்றினை – இறைவன் ஓதிய வீட்டு நெறியை; பற்றுக – நன்னெறி என்று மனத்துக் கொள்க; அப்பற்றைப்பற்றுக – அதன் கண் உபாயத்தை மனத்தால் செய்க; (உபாயம் என்றது தியானசமாதிகளை)

# 36. மெய்யுணர்தல்

351. பொருளல் லவற்றைப் பொருளென் றுணருந்
மருளானு மாணுப் பிறப்பு.

352. இருணீங்கி இன்பம் பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

353. ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து.

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

355. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

357. ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு

359. சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

360. காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

பொருள்:– 351. மருள் – விபரீத உணர்வு; மாணு – இன்பமில்லாத. 352. மாசறு காட்சியவர் – மெய் உணர்வினை உடையவர். 354. ஐயுணர்வு – மனம்; எய்தியக்கண்ணும் – தாரணைக்கண் நின்ற வழியும் இன்று – இல்லை. 355. அப்பொருள் – அப்பொருளின் கண் நின்று. 356. ஈண்டு – இம் மக்கட் பிறப்பில்; கற்று – உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர் பால் கேட்டு; தலைப்படுவர் – அடைவார்; ஈண்டு வாரா நெறி – மோட்ச நெறி. 357. ஒரு தலையா ஓர்த்து – (உபதேசப் பொருளைத்) தெளிய ஆராய்ந்து; உள்ளது – முதற் பொருள்; பேர்த்து – மீண்டும். 358. பிறப்பு என்னும் பேதைமை – பிறப்பிற்கு முதற் காரணம் ஆகிய விபரீத உணர்வு; சிறப்பு என்னும் செம்பொருள் – வீட்டிற்கு நிமித்த காரணம் ஆகிய இறைவன். 359. சார்பு – எல்லாப் பொருட்கும் சார்பு ஆகிய செம்பொருள்; சார்பு கெட – யான் எனது என்னும் இருவகைப் பற்றும் கெட; அழித்து – உணர்வு ஒழுக்கங்களை அழித்து; சார்தரா – சாரமாட்டா. 360. நாமம் – பெயர்; நோய் – வினைப்பயன்.

# 37. அவா வறுத்தல்

361. அவா என்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

363. வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
ஆண்டும் அஃதொப்ப தில்.

364. தூஉய்மை என்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

365. அற்றவர் என்பார் அவா அற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

366. அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

368. அவா இல்லார்க் கில்லாகும் துன்பம்அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

369. இன்பம் இடையறா தீண்டும் அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

பொருள்:– 361. தவாஅ – தவா – கெடாது வருகின்ற. 362. அது – பிறவாமை. 363. ஆண்டும் – மோட்ச உலகத்திலும். 364. தூஉய்மை – தூய்மை – வீடு ( – மோட்சம் ) : அது – அவாவின்மை; வாஅய்மை – வாய்மை ( – இறைவனை ). 365. அற்றவர் – பிறவி அற்றவர்; அற்றாக – சில துன்பங்கள் அற்றதல்லது. 366. அஞ்சுவது – அவாவை அஞ்சுவது; ஓரும் என்பன இரண்டும் அசைநிலை. 367. ஆற்ற – மிகவும்; தவாவினை – பிறதுன்பங்களான் அழியாமைக்கு ஏதுவாகிய துறவறங்கள். 368. இல்லாகும் – இல்லை; அஃது – அவா; உண்டேல் – உண்டெனின்; தவா அது – தவாது – கெடாது. 369. ஈண்டும் – பெருகும். 370. ஆரா இயற்கை – நிறையாத இயல்பினையுடைய; பேரா இயற்கை – அழியாத இயல்பு – வீடு.

# 38. ஊழ்

371. ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி.

372. பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை.

373. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

375. நல்லவை எல்லாஅம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு.

376. பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.

377. வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது.

378. துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியும் எனின்.

379. நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.

380. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்.

பொருள்:– 371. அசைவின்மை – முயற்சி; மடி – சோம்பல். 372. இழவூழ்–கைப்பொருள் இழத்தற்குக் காரணம் ஆன ஊழ். அகற்றும் – விரிக்கும்; உற்றக்கடை – தோன்றினால். 373. உண்மை அறிவு – (ஊழால் ஆகிய) பேதைமை உணர்வு. 374. திரு – செல்வம் உடையவர் ஆதல்; தெள்ளியர் – அறிவு உடையவர். 375. எல்லாஅம் – எல்லாம்; செயற்கு – உண்டாக்குவதற்கு. 376. பரியினும் – வருந்திக் காப்பினும்; பால் – ஊழ்; பால் அல்ல – ஊழ் அல்லாத பொருள்கள்; உய்த்துச் சொரியினும் – புறத்தே கொண்டு போய்ச் சொரிந்தாலும்; தம – தம்முடைய பொருள்கள் 377. வகுத்தான்–தெய்வம்; துய்த்தல்–நுகர்தல். 378. துப்புரவு – நுகரும் பொருள்; உறற் பால – வந்து பொருந்தும் துன்பம்; ஊட்டா – பொருந்தாது. 379. நல்லவாக் காண்பவர் – நல்லவை என்று அனுபவிப்பவர்.

அறத்துப்பால் முற்றும்.

# 2. பொருட்பால்

## அரசியல்

## 39. இறைமாட்சி

381. படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

382. அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு.

383. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.

384. அறன்இழுக்கா தல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடைய தரசு.

385. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்.

387. இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

388. முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறைஎன்று வைக்கப் படும்.

389. செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

390. கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

பொருள்:- இறைமாட்சி - அரசனுடைய நற்குண நற்செய்கைகள். 381. குடி — குடியிருக்கும் மக்களையுடைய நாடு. கூழ் — செல்வம். அமைச்சு — மந்திரி. ஏறு — ஆண்சிங்கம் (போல்வான்). 382. எஞ்சாமை — இடைவிடாது நிற்றல். 383. தூங்காமை — விரைவு உடைமை. துணிவு – ஆண்மை. 384. அறன் இழுக்காது – அறத்தின் வழுவாது ஒழுகி. மறன் இழுக்கா — வீரத்தின் வழுவாத. 385. இயற்றல் – பொருள்வரும் வழிகளை உண்டாக்குதல். ஈட்டல்–சேர்த்து வைத்தல். வகுத்தல் — செலவுசெய்தல். 386. கடுஞ்சொல்லன் அல்லனேல் – கடுஞ்சொல் சொல்லாதவனாயின். நிலம் – நிலத்தை மீக்கூறும் — (உலகம்) உயர்த்துக்கூறும். 387. அளிக்க — காக்க. கண்டனைத்து - கருதிய அளவினையுடையது - கருதிய பொருளெல்லாம் சுரக்கும். 389. கவிகைக்கீழ் — குடைநிழற்கீழ். 390. அளி — முகமலர்ந்து இனியகூறல். குடிஓம்பல் — தளர்ந்த குடிகளைப் பாது காத்தல். ஒளி–விளக்கு.

# 40. கல்வி

391. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

392. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

393. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

396. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

397. யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

398. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

399. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

400. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

பொருள்:– 391. கற்பவை - கற்கவேண்டிய நூல்கள், அதற்குத்தக- அக்கல்வியறிவிற்குப் பொருந்த. 394. தலைக்கூடி — அளவளாவி, உள்ள – (இனி இவரை யாம் எங்ஙனம் சேருவோம் என) நினையுமாறு. 395. உடையார் – செல்வம் உடையார், இல்லார் – செல்வம் இல்லாதவர், ஏக்கற்று – (ஆசிரியர்முன்) விரும்பிக் கீழ்ப்படிந்து, கற்றார் – கற்றவர் தலையாயினர். 396. தொட்ட அனைத்து – தோண்டிய அளவு, கேணி — சிறுகுளம். 397. சாந்துணையும் — இறக்குமளவும். 398. ஒருமைக்கண் – ஒருபிறப்பில், எழுமையும் – எழுபிறப்பு, ஏமாப்பு – உதவுதல். 399. காமுறுவர் – கல்வியை விரும்புவர், 400. விழுச் செல்வம் - சிறப்புடைய செல்வம், மற்றையவை - மணியும் பொன்னும் முதலாயின, மாடல்ல – செல்வமல்ல.

# 41. கல்லாமை

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.
402. கல்லாதான் சொற்கா முறுதல் முலைஇரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று.
403. கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.
404. கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.
405. கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.
406. உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.
407. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.
408. நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.
409. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.
410. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

பொருள்:- 401. நூல்இன்றி – நூல்களைக் கற்காமல், கோட்டி கொளல்-சபையில் ஒன்றனைச் சொல்லுதல். 402. சொல் காமுறுதல்—சபையில் பேச வேண்டுமென்று விரும்புதல், பெண் காமுற்றற்று — பெண்தன்மையை விரும்புவது போலும். 403. நனிநல்லர் – மிகவும் நல்லவர், இருக்கப்பெறின்–இருந்தால். 404. ஒட்பம்–அறிவுடைமை, கழிய – மிக. 405. தகைமை — மதிப்பு, தலைப்பெய்து — கண்டு, சொல்லாட – பேச, சோர்வுபடும் – கெடும். 406. மாத்திரையர் – சொல்லும் அளவினர். பயவா – விளையாத. 407. மாண் – சிறப்புப் பெற்று. நுழைபுலம் – பரந்த அறிவு. எழில் – எழுச்சி – உடம்பின் வளர்ச்சி, நலம் — அழகு. புனைபாவை — செய்யப்பட்ட பதுமை, அற்று – போலும். 409. அனைத்து – அவ்வளவு, பாடு – பெருமை. 410. விலங்கோடு ஒப்பு நோக்க மக்கள் நன்மையுடையர். அந்தஅளவு கற்றாரோடு கல்லாதவர் தீமையுடையர்.

# 42. கேள்வி

411. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

412. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

413. செவியுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து.

414. கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

415. இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

416. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்
ஈண்டிய கேள்வி யவர். [இழைத்துணர்ந்து

418. கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

419. நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

420. செவியிற் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

பொருள் :- கேள்வி - கேட்கத்தக்க நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்.

411. செல்வத்துட் செல்வம் — சிறப்புடைய செல்வம். தலை - மேலானது. 412. செவிக்குணவு - கேள்வி. 413. அவியுணவின் ஆன்றோர் - தேவர், அவி - தேவர்க்கு வேள்வித்தீயிற் கொடுக்கும் நெய் பொரி முதலியன. ஒற்கத்தின் — தளர்ச்சி வந்தவிடத்து. ஊற்று ஆம்துணை - பற்றுக்கோடு ஆகும் துணையாய் இருப்பது. 415. இழுக்கல் உடையுழி—வழுக்கும்படியான சேற்றுநிலம், ஊற்றுக்கோல்அற்று — ஊன்றுகோல்போல் உதவும். 416. எனைத்தானும் — சிறிதாயினும், ஆன்ற — நிறைந்த. 417. பிழைத்து—பிறழ, பேதைமை—அறிவின்மை பயக்கும் சொற்கள், இழைத்து — நுட்பமாக ஆராய்ந்து, ஈண்டிய — நிறைந்த. 418. கேளாத்தகைய — செவிடாம் தன்மைய, தோட்கப் படாத - துளைக்கப்படாத, 419. நுணங்கிய — நுட்பமான, வணங்கிய வாயினர் — பணிந்த மொழியினையுடையவர். 420. செவியிற்சுவை — சொற்சுவை பொருட்சுவை. வாயுணர்வு — வாயால் உண்ணப்படும் பொருள்களின் சுவையை உணர்தல். அவியினும் — இறந்தாலும்.

# 43. அறிவுடைமை

421. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.
422. சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.
423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.
424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.
425. உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்ல தறிவு.
426. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)
அவ்வ துறைவ தறிவு.
427. அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.
428. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.
429. எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.
430. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

பொருள்:— 421. செறுவார் – பகைவர், அற்றம் காக்கும் – அழிவு வாராமல் காக்கும். 422. செலவிடா (மனத்தைச்) செல்லவிடாது. தீதொரீஇ — தீயதினின்று நீக்கி, உய்ப்பது — செலுத்துவது. 424. எண்பொருளவாக — எளியபொருள் உடையவையாமாறு, செல — கேட்பவர் மனம் அறிந்துகொள்ளுமாறு. 425. தழீஇயது – நட்பாக்குவது, ஒட்பம் — அறிவுடைமை, மலர்தல் — (முன்) முகமலர்தல், கூம்புதல் — (பின்) முகம்பாடுதல், இல்லது — இல்லாமல் ஒரே நிலைமையை யுடையவனாயிருத்தல். 426. எவ்வது — எந்தவழியால், உறைவது – நடப்பது, அவ்வது – அவ்வழியில். 427. ஆவது –(இனி) வரப்போவதை, அறிகல்லாதவர் — அறியமாட்டாதவர். 428. பேதைமை — அறிவின்மை, அஞ்சாமை — எண்ணாது செய்தல், அஞ்சுதல் – ஆலோசித்து அக்காரியங்களைச் செய்யாதிருத்தல். 429. எதிரதா – வரவிருக்கும் தீங்கை, அதிர – நடுங்க, நோய் – துன்பம். 430. என் – எல்லாம், ஏனும் – எனினும்.

# 44. குற்றங்கடிதல்

431. செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

432. இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு.

433. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை.

435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

436. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

437. செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்

438. பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று.

439. வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

440. காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்
ஏதில ஏதிலார் நூல்.

பொருள்:— குற்றங் கடிதல்: கடிதல் – நீக்குதல். 431. சிறுமை – காமம். பெருக்கம் – செல்வம். பெருமித நீர்த்து – மதிப்புடையது. 432. இவறல் – லோபம். மாண்பு இறந்த – நன்மையின் நீங்கிய. மாணா – அளவுகடந்த. உவகை – அளவுக்கு விஞ்சிய தாட்சண்யம். இறை – அரசன். ஏதம் – குற்றம். 433. துணை – அளவு. 434. அற்றம் தரூஉம் – தீங்கு விளைவிக்கும். குற்றமே காக்க – குற்றம் தன்கண் வாராமல் காக்கவேண்டும். 435. எரி – நெருப்பு. வைத்தூறு – வைக்கோலின் போர். (வருமுன்னர் – குற்றம் வருவதற்குமுன்) 436. காண்கிற்பின் – கண்டு ஒழிக்க வல்லவன் ஆனால், என் – யாது. 437. இவறியான் – உலோபம் செய்தவன். உயற்பாலது அன்றி – இருக்கும் தன்மையுடையதல்லாமல். 438. இவறன்மை – உலோபத்தன்மை. எற்றுள்ளும் – எவற்றுள்ளும். 439. வியவற்க – தன்னைத் தானே மேன்மையாக நினைக்காதிருக்கக்கடவன். நயவற்க – விரும்பா தொழிக. 440. காதல – விரும்பிய பொருள்களை. உய்க்கிற்பின்–அநுபவித்தால். ஏதிலார் நூல் – பகைவர் எண்ணம். ஏதில – பயன் படமாட்டா.

# 45. பெரியாரைத் துணைக்கோடல்

441. அறன்அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன்அறிந்து தேர்ந்து கொளல்.

442. உற்றநோய் நீக்கி உறாஅமை முன்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

443. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

444. தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

445. சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

446. தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

447. இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்கும் தகைமை யவர்.

448. இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்.

449. முதலிலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்
சார்பிலார்க்கு இல்லை நிலை.

450. பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.

பொருள்:– துணைக் கோடல் – துணையாகக் கொள்ளுதல். 441. கேண்மை – துணை. கொளல் – கொள்க. 442. உறாஅமை – வராதபடி பெற்றியார் – தன்மையுடையாரை. கொளல் – கொள்க. 443. தமராக் கொளல்–சிறந்த துணைவராகக் கொள்ளுதல். 444. வன்மை–வலிமை தலை–மேலானது. 445. சூழ்வார் – அமைச்சரை. சூழ்ந்து – ஆராய்ந்து. 446. செற்றார் – பகைவர். 447. இடிக்கும் துணையாரை – வற்புறுத்திக் கூறும் தன்மையுடையாரை, 448. ஏமரா – காவலற்ற. இலானும் – இல்லை ஆயினும். 449. ஊதியம்–லாபம். மதலையாம் சார்பு – தம்மைத் தாங்கும் துணை. 450. பல்லார் – பலர். தொடர் – நட்பு.

# 46. சிற்றினஞ்சேராமை

451. சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

452. நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு.

453. மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்னான் எனப்படும் சொல்.

454. மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்(கு)
இனத்துள தாகும் அறிவு.

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனந்தூய்மை தூவா வரும்.

456. மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்(கு)
இல்லைநன் றாகா வினை.

457. மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்.

458. மனநலம் நன்குடையர் ஆயினும் சான்றோர்க்(கு)
இனநலம் ஏமாப் புடைத்து.

459. மனநலத்தின் ஆகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தின் ஏமாப் புடைத்து.

460. நல்லினத்தி னூங்குந் துணைஇல்லை தீஇனத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

**பொருள் :–** 451. சூழ்ந்துவிடும்–எண்ணித்துணியும், 452. அற்று ஆகும்–அந்நிலத்தின் தன்மையுடையதாம், 453. உணர்ச்சி–இயற்கை யறிவு, 455. தூவா – பற்றுக்கோடாக, 456. எச்சம் – மக்கட்பேறு, 457. ஆக்கம் – செல்வத்தைத் தரும், 458. நன்கு– நல்வினையால், சான்றோர்க்கு–பல நற்குணங்கள் நிறைந்தவர்க்கு, ஏமாப்புஉடைத்து– உறுதிதருவதாதல் உடையது, 459. மறுமை–மறு பிறப்பிலடையும் இன்பம், அஃது – மறுமையின்பம், 460. ஊங்கு – மிக்க, அல்லற் படுப்பதும் – பகையும்.

# 47. தெரிந்துசெயல்வகை

461. அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.
462. தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்(கு)
அரும்பொருள் யாதொன்றும் இல்.
463. ஆக்கம் கருதி முதல்இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.
464. தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா டஞ்சு பவர்.
465. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு.
466. செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.
467. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.
468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.
469. நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை.
470. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா உலகு.

பொருள் :— தெரிந்து செயல் வகை — தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம்.
461. அழிவது — செலவு, ஆவது — செலவு செய்ததற்கு ஈடாய்ச் செலவுசெய்த காலத்தில் வருவது, வழி பயக்கும்-பின்தரும், ஊதியம்- செலவு செய்ததற்குமேல் பிற்காலத்தில் வருவது, சூழ்ந்து - சீர்தூக்கி, செயல் – செய்க. 462. தேர்ந்து – ஆராய்ந்து. 463. ஆக்கம்–ஊதியம், ஊக்கார் — மேற்கொள்ளார். 464. இலதனை — இல்லாதவினையை, இளிவு – அவமானம், ஏதம் – குற்றம், பாடு – உண்டாதல். 465. அறச்சூழாது – முழுவதும் எண்ணாமல், எழுதல் – (அரசன் பகைவர் மேல்) செல்லுதல், பாத்திப்படுப்பதோர் ஆறு — வளரும் நிலத்தில் நிலைபெறச் செய்வதொரு வழியாம். 467. துணிக — தொடங்குக, இழுக்கு – குற்றம். 468. ஆற்றின் – நிறைவேறும் உபாயங்களால், வருந்தாவருத்தம் — முயலாதமுயற்சி, போற்றினும் — காப்பினும், பொத்துப்படும் - கெடுதியுண்டாகும். 469. ஆற்றலுள்ளும் – செய்த விடத்தும், பண்பு – குணம், ஆற்றாக்கடை – செய்யாவிடின். 470. எள்ளாத – (உலகம்) இகழாத உபாயங்களை. தம்மொடு கொள்ளாத – தம் நிலைமையொடு பொருந்தாத உபாயங்களை (அரசர் செய்தால்). உலகு கொள்ளாது – உலகம் அரசரைப் பழிக்கும்.

# 48. வலியறிதல்

471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

472. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

473. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

474. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

475. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

476. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

477. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

478. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

480. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

பொருள் :- 472. ஒல்வது — செய்யத்தக்க செயல். அறிவது — அறியவேண்டிய வலி, செல்லாதது — முடியாத பொருள், இல் — இல்லை. 473. உடை — உடைய, ஊக்கி — வினைசெய்தலைத் தொடங்கி, முரிந்தார் – கெட்டவர். 474. ஆங்கு – அயல் வேந்தரோடு, அளவு – தன்வலியளவு, வியந்தான் – தன்னைத்தானே மதித்த அரசன். 475. சாகாடு – வண்டி, இறும் – முரியும், பெயின் – ஏற்றினால். 476. கொம்பர்–மரக்கிளை, அஃதிறந்து – அவ்வளவினைக் கடந்து, ஊக்கின்– மேலும்ஏற ஊக்குவராயின். 477. ஆற்றின் – கொடுக்கவேண்டிய வழியாலே, அளவு–பொருளின் அளவு. போற்றி ஒழுகும்–பாதுகாத்து நடக்கும். 478. ஆகுஆறு – பொருள் வருகின்ற வழி, இட்டிது – சிறிது, அகலாக்கடை – பொருள் வருகின்ற வழியினும் அதிகப்படா தாயின், போகாறு — செலவு ஆகின்ற நெறி. 479. உளபோல — உள்ளனபோலத் தோன்றி. இல்லாகி – இல்லையாய், தோன்றா – அத்தோற்றமும் இல்லாமல். 480. உளவரை – தனக்கு உள்ள செல்வத்தின் அளவு, தூக்காத–ஆராய்ந்து பார்க்காமைக்குக் காரணமான, ஒப்புரவாண்மை — உபகாரம் செய்யும் தன்மையால், வளவரை — செல்வத்தின் எல்லை. வல்லை – விரைவாக.

# 49. காலமறிதல்

481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

482. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

483. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

484. ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

485. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்(து)
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

488. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

489. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

**பொருள் :-** 481. கூகை – கோட்டான், இகல் – போர், பொழுது வேண்டும்–காலம்வேண்டும். 482. பருவத்தோடு ஒட்ட–காலத்தோடு பொருந்த, திருவினை – செல்வத்தை, தீராமை ஆர்க்கும் – நீங்காமல் கட்டிவைக்கும். 483. அருவினை – அரியவினை, கருவியான் – கருவிகளுடனே. 484. ஞாலம் – உலகம். 485. கலங்காது – தவறுமல். 486. ஒடுக்கம் — காலம்பார்த்து இருக்கின்ற இருப்பு, பொருதகர் — சண்டை செய்கின்ற ஆட்டுக்கடா, பேருந்தகைத்து — பின்னே கால்வாங்கும் தன்மைத்து. 487. பொள்ளென–விரைவாக, ஆங்கே–பகைவர் குற்றம் செய்த அப்பொழுதே, புறம்வேரார் – வெளியிற் கோபங்காட்டார், உள்வேர்ப்பர்–உள்ளே கோபத்தை வைத்திருப்பர், ஒள்ளியவர் – அறிவுடைய அரசர். 488. செறுநர் – பகைவர். சுமக்க–பணிக, இறுவரைகாணின் – அழியும் காலம் வந்தபொழுது, தலை கிழக்காம்–தடையின்றி அழிவர். 489. எய்தற்கரியது–அடைவதற்கு அரிய காலம், இயைந்தக்கால்–அடைந்தால், அந்நிலையே–அக்காலம் கழிவதற்கு முன்பே. செயல் — செய்க. 490. கூம்பும் பருவத்து — தொழில்மேல் செல்லாதிருக்கும் காலத்து, சீர்த்தவிடத்து – செல்லுங் காலம் கிடைத்தபொழுது.

# 48. வலியறிதல்

471. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

472. ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

473. உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்.

474. அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

475. பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்.

476. நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

477. ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.

478. ஆகா றளவிட்டி தாயினும் கேடில்லை
போகா றகலாக் கடை.

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

480. உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.

பொருள் :— 472. ஒல்வது — செய்யத்தக்க செயல். அறிவது — அறியவேண்டிய வலி, செல்லாதது — முடியாத பொருள், இல் — இல்லை. 473. உடை — உடைய, ஊக்கி — வினைசெய்தலைத் தொடங்கி, முரிந்தார் — கெட்டவர். 474. ஆங்கு — அயல் வேந்தரோடு, அளவு — தன்வலியளவு, வியந்தான் — தன்னைத்தானே மதித்த அரசன். 475. சாகாடு — வண்டி, இறும் — முரியும், பெயின் — ஏற்றினால். 476. கொம்பர்—மரக்கிளை, அஃதிறந்து — அவ்வளவினைக் கடந்து, ஊக்கின்—மேலும்ஏற ஊக்குவராயின். 477. ஆற்றின் — கொடுக்கவேண்டிய வழியாலே, அளவு-பொருளின் அளவு. போற்றி ஒழுகும்—பாதுகாத்து நடக்கும். 478. ஆகுஆறு — பொருள் வருகின்ற வழி, இட்டிது — சிறிது, அகலாக்கடை — பொருள் வருகின்ற வழியினும் அதிகப்படாதாயின், போகாறு — செலவு ஆகின்ற நெறி. 479. உளபோல — உள்ளனபோலத் தோன்றி, இல்லாகி — இல்லையாய், தோன்றா — அத்தோற்றமும் இல்லாமல். 480. உளவரை — தனக்கு உள்ள செல்வத்தின் அளவு, தூக்காத—ஆராய்ந்து பார்க்காமைக்குக் காரணமான, ஒப்புரவாண்மை — உபகாரம் செய்யும் தன்மையால், வளவரை — செல்வத்தின் எல்லை, வல்லை — விரைவாக.

# 49. காலமறிதல்

481. பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

482. பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்
தீராமை ஆர்க்கும் கயிறு.

483. அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.

484. ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தான் செயின்.

485. காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்.

486. ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேரும் தகைத்து.

487. பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்(து)
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.

488. செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.

489. எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

**பொருள் :–** 481. கூகை – கோட்டான், இகல் – போர், பொழுது வேண்டும்–காலம்வேண்டும். 482. பருவத்தோடு ஒட்ட–காலத்தோடு பொருந்த, திருவினை – செல்வத்தை, தீராமை ஆர்க்கும் – நீங்காமல் கட்டிவைக்கும். 483. அருவினை – அரியவினை, கருவியான் – கருவிகளூடனே. 484. ஞாலம் – உலகம். 485. கலங்காது – தவறுமல். 486. ஒடுக்கம் — காலம்பார்த்து இருக்கின்ற இருப்பு, பொருதகர் — சண்டை செய்கின்ற ஆட்டுக்கடா, பேரும்தகைத்து — பின்னே கால்வாங்கும் தன்மைத்து. 487. பொள்ளென–விரைவாக, ஆங்கே–பகைவர் குற்றம் செய்த அப்பொழுதே, புறம்வேரார் – வெளியிற் கோபங்காட்டார், உள்வேர்ப்பர்–உள்ளே கோபத்தை வைத்திருப்பர், ஒள்ளியவர் – அறிவுடைய அரசர். 488. செறுநர் – பகைவர். சுமக்க–பணிக, இறுவரைகாணின் – அழியும் காலம் வந்தபொழுது, தலை கிழக்காம்–தடையின்றி அழிவர். 489. எய்தற்கரியது–அடைவதற்கு அரிய காலம், இயைந்தக்கால்–அடைந்தால், அந்நிலையே–அக்காலம் கழிவதற்கு முன்பே. செயல் — செய்க. 490. கூம்பும் பருவத்து — தொழில்மேல் செல்லாதிருக்கும் காலத்து, சீர்த்தவிடத்து – செல்லுங் காலம் கிடைத்தபொழுது.

# 50. இடனறிதல்

491. தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்னல் லது.

492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்
ஆக்கம் பலவும் தரும்.

493. ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்றார்கண் போற்றிச் செயின்.

494. எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

495. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

496. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

497. அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தான் செயின்.

498. சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.

499. சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்
உறைநிலத்தோ டொட்டல் அரிது.

500. காலாழ் களரின் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு.

பொருள் :- இடனறிதல் — அரசன் தான் வெல்லுவதற்கு ஏற்ற இடத்தை அறிதல்.

491. எள்ளற்க – இகழாதிருக்க. 492. முரண்சேர்ந்த – மாறுபாடு கொண்ட, மொய்ம்பினவர் – வலிமையுடையவர், ஆக்கம் – செல்வம். 493. ஆற்றார் – வலிமையில்லாதவர், ஆற்றி–வலியராய், அடுப – வெல்வர், போற்றார்கண் — பகைவரிடத்து, போற்றி — தம்மைக் காத்து. 494. துன்னியார் – சென்ற அரசர், துன்னி – (அரணைப்) பொருந்தி, எண்ணியார் – வெல்ல எண்ணியிருந்த பகைவர். 495. நெடும்புனலுள் – ஆழமுடைய நீரில், பிறஅடும் — பிற எல்லாம் வெல்லும். 496. வல் – வலிய, கால் – சக்கரம், நாவாய் – மரக்கலம். 497. அஞ்சாமை – பகைவர்க்கு அஞ்சாத மனவுறுதி, எஞ்சாமை எண்ணி – விடாமல் ஆலோசித்து. 498. செல்லிடம் – தங்கியுள்ள இடம், உறுபடையான் — பெரும்படையுடையவன், ஊக்கம் — பெருமை. 499. சிறைநலன் – அரண் அழித்தற்கு அருமை, உறைநிலத்தோடொட்டல்–உறைகின்ற நிலத்தின் கண் சென்று தாக்குதல். 500. களர் – சேற்றுநிலம், நரிஅடும் – நரிகொல்லும், கண்அஞ்சா – பாகர்க்கு அடங்காத, கோத்த – தந்தங்களையுடைய, களிறு – யானை.

# 51. தெரிந்து தெளிதல்

501. அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

502. குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு.

503. அரியகற் றாசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

504. குணநாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

505. பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

506. அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

507. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாம் தரும்.

508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

509. தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

510. தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

பொருள் :— தெரிந்துதெளிதல் – அமைச்சர் முதலாயினாரை ஆராய்ந்துதெளிதல். 502. வடுப்பரியும்–பழிவருமோ என்று அஞ்சும், கட்டே — இடத்திலே. 503. அரிய — கற்பதற்கு அரிய நூல்கள், ஆசுஅற்றார் இடத்தும் – குற்றங்கள் இல்லாதவரிடத்தும்; தெரியுங்கால் – ஆராயுமிடத்து, வெளிறுஇன்மை — அறியாமை இன்மை. 504. நாடி – ஆராய்ந்து, மிகை – மிக்கவை, மிக்ககொளல் – மிக்கவற்றால் அறிக. 505. கட்டளைக்கல் – உரைகல். 506. அற்றாரை – சுற்றமில்லாதாரை. ஓம்புக–ஒழிக. 507. காதன்மை–அன்புடைமை, கந்தா–பற்றுக்கோடாக. அறிவுஅறியார் – அறியவேண்டுவனவற்றை அறியாதாரை, பேதைமை – அறியாமை. 508. வழிமுறை – பரம்பரை. 509. தேராதுதேறற்க — ஆராய்ந்து தெளிக. 510. தேரான் தெளிவு – ஆராயாது தெளிதல், ஐயுறவு – சந்தேகப்படுதல்.

# 52. தெரிந்து வினையாடல்

511. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்.

512. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
ஆராய்வான் செய்க வினை.

513. அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்
நன்குடையான் கட்டே தெளிவு.

514. எனைவகையால் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகு மாந்தர் பலர்.

515. அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

516. செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல்.

517. இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்.

518. வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல்.

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு.

520. நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

பொருள் ;- 512. வாரி – பொருள்வரும் வழிகள். உற்றவை — நேர்ந்ததடைகள். 513. தேற்றம் – கலங்காமை, கட்டே – இடத்தே. 515. செய்கிற்பாற் கல்லால் — முடிவுசெய்ய வல்லானையல்லது. சிறந்தான் – அன்பிற் சிறந்தவன், ஏவற்பாற்றன்று – ஏவும் இயல்புடையதன்று. 516. எய்த – பொருந்த, செயல் – செய்க. 517. ஆய்ந்து — ஆராய்ந்து, விடல் — விடுக. 518. நாடியபின்றை — ஆராய்ந்தபின், உரியனாக — தானே செய்துமுடிக்கும் உரிமையுடையவனாக. 519. வினை — முயற்சி, திரு — செல்வம். 520. கோடாமை – மாறுபடாது இருப்பின்.

# 53. சுற்றந்தழால்

521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

522. விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்.

523. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

524. சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்.

525. கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தால் சுற்றப் படும்.

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

527. காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

529. தமராகித் தன்துறந்தார் சுற்றம் அமராமைக்
காரணம் இன்றி வரும்.

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.

பொருள் :– தழால்–தழுவுதல். 521. பற்று–செல்வம், பழைமை–பழைய தொடர்பு. 522. விருப்பறா – விருப்பம் நீங்காத. அருப்புஅறா–செழித்துவளர்தல் நீங்காத. ஆக்கம் – செல்வம். 523. குளவளா — குளத்தின் பரப்பு, கோடு – கரை. 524. சுற்றப்பட – சூழும்வகை, பெற்றத்தால் – பெற்றதனால். 526. வெகுளிபேணான் – கோபத்தை விரும்பானாயின், அவனின் – அவன்போல. மருங்கு – சுற்றம், இல்–இல்லை. 527, கரவா – மறையாது, கரைந்து – அழைத்து, அன்ன நீரார்க்கே – அத்தகைய இயல்பினை உடையார்க்கே. 528. வரிசையா–தகுதிக்கு ஏற்ப. 529. தன்துறந்தார் – தன்னைப் பிரிந்தார், சுற்றம்–சுற்றம் ஆதல். அமராமைக் காரணம் – தன்னோடு கலவாமல் பிரிந்து சென்றதற்குக் காரணம், இன்றி – தன்னிடத்து இல்லையாக. 530. உழை — தன்னிடத்தினின்று.

# 54. பொச்சாவாமை

531. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியின் சோர்வு.

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

533. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை அதுஉலகத்(து)
எப்பானூ லோர்க்குந் துணிவு.

534. அச்சம் உடையார்க் கரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

535. முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

536. இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுஒப்ப தில்.

537. அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியான் போற்றிச் செயின்.

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யா(து)
இகழ்ந்தார்க் கெழுமையும் இல்.

539. இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

540. உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்.

பொருள் :— பொச்சாவாமை — (தற்காத்தல் பகையழித்தல் முதலிய காரியங்களில்) சோர்தலைச் செய்யாமை.
531. இறந்த வெகுளி — அளவுகடந்த கோபம், உவகை — அளவு கடந்த மகிழ்ச்சி, மகிழ்ச்சி — உவகையால் உண்டாகும் மதிமயக்கம். 532. பொச்சாப்பு — மறவி, நிச்சநிரப்பு — விடாத வறுமை. 533. புகழ்மை — புகழ்உடைமை. 534. ஆங்கு — அதுபோல, நன்கு — செல்வம் முதலியவற்றால் ஆயபயன். 535. இழுக்கியான் — மறந்திருந்தான், ஊறு — துன்பம் உற்றகாலத்து, இரங்கிவிடும் — இரங்குவான். 536. இழுக்காமை - மறவாமைக் குணம், வழுக்காமை வாயின் — ஒழியாது வாய்க்குமாயின். 537. ஆகாத — முடியாத காரியங்கள், பொச்சாவா — மறவாத, கருவியான் — மனத்தான். 538. இல் — நன்மை இல்லை. 539. இகழ்ச்சியின் — சோர்வினால், உள்ளுக — நினைக்க, மைந்துறும்பொழுது — வலியுறும்பொழுது ( — மிக்கு இருக்கும்பொழுது) 540. உள்ளியது - நினைத்தபொருளை, எய்தல் - அடைதல்.

# 55. செங்கோன்மை

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.

542. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.

543. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

546. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடா தெனின்.

547. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.

548. எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
தண்பதத்தால் தானே கெடும்.

549. குடிபுறம் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

550. கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்.

**பொருள்:–** 541. ஓர்ந்து– ஆராய்ந்தறிந்து. கண்ணோடாது– தாட்சணியப் படாமல். இறை – நடுவுநிலைமை. செய்வஃது – செய்வது. 544. கோலோச்சும் – செங்கோல் செலுத்தும். 545. இயல்புளி – இயல்பால். நாட்ட – நாட்டில் உள்ளன. பெயல் – பருவமழை. 546. அதூஉம் – அதுவும் – செங்கோல். கோடாதெனின் – கோணாதிருக்குமானால். 547. இறை – அரசனை. வையகம் – உலகம். முறை – செங்கோல். முட்டா – தடைப்படாதபடி. 548. எண்பதத்தான் – எளிதாகக்காட்சி கொடுக்கும் தன்மையுடையவனாய், ஓரா – ஆராய்ந்து. தண்பதத்தால் – தாழ்ந்த நிலையில் நின்று. 549. குடி – குடிமக்கள். வடு – பழி. 560. வேந்து – அரசனை. கொலையின் ஒறுத்தல் – கொலைத் தண்டனை விதித்தல். பைங்கூழ் – பயிர். களைகட்டதனோடு – களை எடுத்ததோடு.

# 56. கொடுங்கோன்மை

551. கொலைமேற்கொண் டாரின் கொடிதே
அலைமேற் கொண்(டு)
அல்லவை செய்தொழுகும் வேந்து.

552. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

553. நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும்.

554. கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

555. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவாம் மன்னர்க் கொளி.

557. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்
அளியின்மை வாழும் உயிர்க்கு.

558. இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோல்கீழ்ப் படின்.

559. முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்.

560. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவான் எனின்.

பொருள்:— 551. அலை – வருத்துதல். அல்லவை – முறையல்லவற்றை. 552. கோலொடு நின்றான் – வருத்துதல் தொழிலோடு நின்ற அரசன். இரவு – பொருள் வேண்டுதல். 533. நாடு கெடும் - நாட்டை இழக்கும். 554. கூழ் – பொருள். குடி – குடிமக்கள். கோல் கோடி – முறை தவறி. 555. அல்லற்பட்டு – (குடிகள்) துன்பமுற்று. படை – கருவி. 556. மன்னுதல் – (புகழ்) நிலைபெறுதல். செங்கோன்மை (ஆம்)– செங்கோன்மையானும். அஃது – செங்கோன்மை. மன்னாவாம்- உளவாகா. ஒளி — புகழ். 557. துளி — மழை. ஞாலம் — உலகில் வாழும் உயிர்கள். அளி – கருணை. 558. உடைமை – செல்வமுடைமை. படின் – வாழின். 559. உறை கோடி – பெய்யுங்காலத்து மழை பெய்யாமல். 560. பயன் – பால். அறுதொழிலோர்–அந்தணர். காவலன் - அரசன்.

# 57. வெருவந்த செய்யாமை

561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து.

562. கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்.

563. வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன் ஆயின்
ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.

564. இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்.

565. அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

566. கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

567. கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்.

568. இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.

569. செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

570. கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுஅல்ல (து)
இல்லை நிலக்குப் பொறை.

பொருள்;- வெருவந்த – அஞ்சத்தக்க செயல்கள். 561. தக்காங்கு- நடுவு நிலையில். தலைச் செல்லாவண்ணத்தால் – (தன்னின் மெலியவர் அக்குற்றத்தைச்) செய்யாதிருத்தற் பொருட்டு. ஒத்தாங்கு – குற்றத் திற்கேற்ப. ஒறுப்பது – தண்டிப்பவன். 562. கடிது ஓச்சி – அளவு கடந்து தண்டனை செய்வார் போல் தொடங்கி. மெல்ல எறிக – அளவு கடவாமல் தண்டனை செய்க. 563. ஒருவந்தம் – நிச்சயமாக. ஒல்லை – விரைவில். 564. இறை – அரசன். கடியன் – கொடியவன். உறை கடுகி – ஆயுள் குறைந்து. 565. அருஞ்செவ்வி – காட்சிக்கு அரியன். பேஎய் – பேய். 566. கண் – தாட்சணியம். நீடு – நெடுங்காலம் நிலை பெறுதல். ஆங்கே – அப்பொழுதே. 567. கையிகந்த – மிக்க. அடுமுரண் – பகை வெல்லுதற்கு ஏற்ற மாறுபாடு. 568. இனத்து ஆற்றி – அமைச்சர் மேல் வைத்து. சீறின் – கோபித்தால். சிறுகும் – சுருங்கும். 569. சிறை – அரண். செரு – போர். வெருவந்து – பயந்து வெய்து – விரைவில். 570. கடுங்கோல் – கடுங்கோலனாகிய அரசன், பொறை – பாரம்.

# 58. கண்ணோட்டம்

571. கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் உலகு.

572. கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

573. பண்என்னும் பாடற் கியைபின்றேல் கண்என்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்.

574 உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

575 கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்.

576. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ(டு)
இயைந்துகண் ணோடா தவர்.

577. கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டம் இன்மையும் இல்.

578. கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ் உலகு.

579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.

580. பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.

**பொருள்:**- கண்ணோட்டம் – தன்னோடு பழகியவரைக் கண்டால் அவர் கூறியன மறுக்க மாட்டாமை. 571. கழிபெருங்காரிகை – சிறப்புடைய அழகு. உண்மையான் – உண்டு ஆகலான். 572. அஃது – கண்ணோட்டம். 573. இல்லாத கண் – இல்லாதவிடத்து. 574. எவன் செய்யும் — என்னபயனைச்செய்யும். 576. கண் ஓடாதவர் — கண்ணோட்டமில்லாதவர். அனையர் – ஒப்பவர் ஆவர். 578. கருமம் – தொழில். 579. ஒறுத்தாற்றும்–வருத்தும். பண்பு – இயல்பு. தலை – தலையாய இயல்பு. 580. அமைவர் – பழகுவர். நயத்தக்க – விரும்பத் தக்க. நாகரிகம் – கண்ணோட்டம்.

# 59. ஒற்றாடல்

581. ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

582. எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

583. ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்த தில்.

584. வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்(கு)
அனைவரையும் ஆராய்வ தொற்று.

585. கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

586. துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்(து)
என்செயினும் சோர்விலது ஒற்று.

587. மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை
ஐயப்பா டில்லதே ஒற்று.

588. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

589. ஒற்றொற் றுணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

590. சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தா னாகும் மறை.

பொருள்:— 581. ஒற்று – வேவுகாரர். உரைசான்ற – புகழமைந்த. தெற்றென்க-தெளிக. 582. வல்-விரைவில். 583. பொருள் தெரியா– பயனை ஆராயாத. கொற்றம்–வெற்றி. 585. கடாஅ – கடா – சந்தேகப் படவேண்டாத, உகாஅமை – உகாமை – வெளிப்படுத்தாமை. 586. இறந்து–புகமுடியாத இடங்களிலெல்லாம் புகுந்து. சோர்விலது– தளர்ச்சியடையாதவன். 587. வற்றாகி – வல்லவனாய். 589. சொல் தொக்க – சொல் பயனால் ஒத்தனவாயின். 590. சிறப்பு – வெகுமானம் அறிய – பிறர் அறிய. மறை – இரகசியம். புறப்படுத்தானாகும் – வெளியிட்டவனாவன்.

# 60. ஊக்க முடைமை

591. உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று.

592. உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

593. ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்.

594. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை.

595. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

596. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து.

597. சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றும் களிறு.

598. உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னும் செருக்கு.

599. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

600. உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

பொருள்:— 592. உள்ளமுடைமை – ஊக்கமுடைமை. 593. ஆக்கம் – பொருள். அல்லாவர் – மனங்கலங்கார். ஒருவந்தம் – நிலைபெற்ற கைத்துடையார் – கைப் பொருளாக உடையவர். 594. அதர்வினாய்— வழி வினவிக்கொண்டு. அசைவிலா – தளர்தலில்லாத. உழை – இடம் 595. வெள்ளத்து அனைய – நின்ற நீரின் அளவினவாம். மலர் நீட்டம் – நீர்ப்பூக்களின் நாளத்தினது நீளம். 596. உள்ளுவது – கருதுவது. உயர்வுள்ளல் – தம் உயர்ச்சியையே கருதுக. தள்ளினும் – கூடாது போயினும். தள்ளாமை நீர்த்து – ஒழிக்கப்படாத தன்மையுடையது. 597. ஒல்கார் – தளர்ச்சியடையார். உரவோர் – ஊக்கமுடையோர். புதையம்பில் – அம்புகளின் தொகுதியால். பட்டு – புண்பட்டவிடத்து. பாடு ஊன்றும்—தன் பெருமையை நிலை நிறுத்தும். 598. உள்ளம்— ஊக்கம். வள்ளியம்–ஈகைக்குணம் உடையோம். 599. பரியது – பெரிய உடம்பையுடையது. கூர்ங்கோட்டது – கூரிய கொம்பினையுடையது. வெரூஉம்–அஞ்சும். தாக்குறின்–எதிர்ப்படின். 600. உரம்–திண்ணிய அறிவு. உள்ள வெறுக்கை – ஊக்கமிகுதி. அஃது – ஊக்கம். வேறு – வேற்றுமை.

# 61. மடியின்மை

601. குடிஎன்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசூர மாய்ந்து கெடும்.

602. மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியும் தன்னினும் முந்து.

604. குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து
மாண்ட உஞற்றி லவர்க்கு.

605. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது.

607. இடிபுரிந் தெள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.

608. மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்(கு)
அடிமை புகுத்தி விடும்.

609. குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

610. மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.

**பொருள்:**– மடியின்மை – சோம்புதல் இல்லாமை. 601. மடி – சோம்பல். மாசு ஊர — இருள் நெருங்க. 602. மடியா — கெடுத்து. ஒழுகல் – ஒழுகுக. 603. மடிக் கொண்டு — தன்னுள்ளே கொண்டு. பேதை — அறிவில்லாதவன், முந்து — முன்னே, 604. மடி மடிந்து- சோம்பலில் அழுந்தியதனால், மாண்ட உஞற்று — திருந்தியமுயற்சி. 605. நெடுநீர் — விரைந்து செய்வதனை நீட்டித்துச் செய்யும் இயல்பு. துயில் — தூக்கம், கெடுநீரார் — இறக்கும் இயல்பினையுடையார். காமக்கலன் — விரும்பியேறும் மரக்கலம். 606. படியுடையார் பற்று – அரசரது செல்வம், அமைந்தக் கண்ணும் — தானே வந்து எய்திய விடத்தும். மாண்பயன் — சிறந்த பயன், அரிது — இல்லை. 607. இடி புரிந்து — தம் நண்பர் இடித்திடித்து உறுதிமொழி கூறுதலைச் செய்து. 608. ஒன்னார்க்கு — பகைவர்க்கு, 609. மடியாண்மை மாற்ற — சோம்பல் உடையவனாகும் இயல்பை மாற்ற, 610. அடியளந்தான் — காலடியாலே எல்லா உலகையும் அளந்த இறைவன். தாயது — தாவி யளந்த உலகம்.

# 62. ஆள்வினையுடைமை

611. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

612. வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.

613. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.

614. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

615. இன்பம் விழையான் வினைவிழையான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.

616. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

617. மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்.

618. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்(து)
ஆள்வினை இன்மை பழி.

619. தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

620. ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

பொருள்:- ஆள்வினையுடைமை — இடைவிடாத மெய்ம்முயற்சி யுடையனாதல், 611. அசாவாமை — தளராமை — முயற்சியுடைமை, 612. வினைகெடல் – தவிர்ந்து இருத்தலை, ஓம்பல்–நீக்குக. தீர்ந்தாரின்– செய்யாது விட்டாரை. தீர்ந்தன் றுலகு — உலகத்தவர் நீக்குவர். 613. தாளாண்மை — முயற்சி, தகைமை — உயர்ந்தகுணம், வேளாண்மை- உபகாரம், செருக்கு — மேம்பாடு. 614. கைவாள் ஆண்மை — கையால் வாளை உபயோகித்தல், கெடும். — இல்லையாம். 615. விழைவான் — விரும்புவன், கேளிர் – சுற்றத்தார், ஊன்றும் – தாங்கும் 616. முயற் றின்மை – முயற்சியின்மை, இன்மை — வறுமை, 617. மடியுளாள் – சோம்பலில் உறைவாள், மாமுகடி – கரிய மூதேவி, தாமரையினாள் – திருமகள், தாள் உளாள் — முயற்சிக்கண்ணே தங்குவள். 618. பொறி யின்மை — பயனைத்தரும் விதியில்லாமை. அறிவறிந்து — அறிய வேண்டுவன அறிந்து. ஆள்வினையின்மை — முயற்சியின்மை.

# 63. இடுக்கணழியாமை

621. இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.

622. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

623. இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர்.

624 மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.

625. அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்.

626. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்(று)
ஓம்புதல் தேற்றா தவர்.

627. இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாறாக் கொள்ளாதாம் மேல்.

628. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன்.

629. இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்.

630. இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகும்தன்
ஒன்னார் விழையும் சிறப்பு.

பொருள்:— இடுக்கண் அழியாமை – துன்பம் வந்துற்ற காலத்து அதற்கு மனம் கலங்காமை. 621, நகுக – உள்மகிழ்க. அடுத்தூர்வது – நெருக்கி மீது போய் நிற்கவல்லது. அஃது – அம்மகிழ்ச்சி. 622, உள்ள – நினைக்க, 623. இடும்பை படுப்பர் – துன்பம் விளைப்பர். 624. மடுத்தவாய் எல்லாம் – (துன்பம்) வந்துற்ற இடத்தெல்லாம். பகடு அன்னான்–எருதுபோலத் தளர்வில்லாதவன். இடர்ப்பாடுடைத்து – கெடும். 625. இடுக்கண்படும் – கெடும், 626. அற்றேம்— பொருள் அற்றேம், அல்லற்படுபவோ – துன்பப்படுவார்களோ. ஓம்புதல் – காத்தல், தேற்றாதவர் – அறியாதவர், 627. இலக்கம் – இலக்கு. கையாறா – துன்பமாக, (கையாறு – துன்பம்) 628. விழையான் – விரும்பாமல். 630. இன்னாமை – வினைசெய்யுமிடத்து முயற்சியான் வரும் துன்பம்.

# அங்கவியல்

## 64. அமைச்சு

631. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

632. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ(டு)
ஐந்துடன் மாண்ட தமைச்சு.

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

634. தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

635. அறனறிந் தான்றமைந்த சொல்லான்எஞ் ஞான்றும்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.

636. மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்நிற் பவை.

637. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்(து)
இயற்கை அறிந்து செயல்.

638. அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

639. பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.

640. முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

பொருள்:- 631. மாண்டது — மாட்சிமைப் பட்டவன்; வாய்ப்ப எண்ண வல்லவன். 632. வன்கண் — அஞ்சாமை, ஆள்வினை — முயற்சி, ஐந்துடன் — முன்பாட்டில் சொல்லிய அங்கங்கள் ஐந்துடன். 633. பிரித்தல் — பகைவர்க்குத் துணையானவரைப் பிரித்தல். பேணிக் கொளல் — (தம்பால் உள்ளவரைப்) பேணுதல், பொருத்தல் — சேர்த்துக் கொள்ளுதல், 634. தெரிதல் — ஆராய்தல், ஒருதலையா — துணிவு பிறக்குமாறு. 635. ஆன்று — கல்வியான் நிறைந்து. அமைந்த — அடங்கிய. திறன் — வினைசெய்யும் திறன். தேர்ச்சித்துணை — சூழ்ச்சித் துணை ஆய அமைச்சனானவன். 636. மதிநுட்பம் — இயற்கையாகிய நுண்ணறிவு. நூல் — நூலறிவு. அதி — மிக்க. 637. செயற்கை — செய்யும் முறைமை. அறிந்தக்கடைத்தும் — அறிந்த இடத்தும். செயல் — செய்க. 638. அறிகொன்று — அறிந்து சொல்லியவரது அறிவையும் அழித்து, உழை இருந்தான் — அமைச்சன். 639. தெவ்வோர் — பகைவர். 640. திறப்பாடு இலாதவர் — வினை செய்யும் திறன் இல்லாதவர்.

# 65. சொல்வன்மை

641. நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று.

642. ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்.

644. திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
பொருளும் அதனினூஉங் கில்.

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.

646. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்.

647. சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது.

648. விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர்.

650. இணருழ்த்தும் நாறா மலரனையர் கற்ற(து)
உணர விரித்துரையா தார்.

பொருள்:— 641. யாநலம் – பிறநலங்கள். 642. அதனால் – சொல்லால், காத்தோம்பல் – போற்றிக்காக்க. 643. தகை அவாய் – குணங்களை அவாவி, கேளாரும் – பகையாய் ஏற்றுக் கொள்ளாதாரும். வேட்ப – விரும்பும் வண்ணம் 645. பிறிதோர் சொல் – மாற்றாது மறுதலைச் சொல். 646. கோடல் – கொள்ளுதல், மாட்சியின் மாசற்றார் கோள் – அமைச்சியலுள் குற்ற மற்றாரது துணிபு. 647. இகல் வெல்லல் – மாறுபாட்டின் கண் வெல்லுதல். 648. ஞாலம் – உலகம். நிரந்து – முறையேகோத்து. 649. தேற்றாதவர் – அறியாதவர். 650. இணர் ஊழ்த்தும் – கொத்தின் கண்ணே மலர்ந்திருந்தும். அனையர் – ஒப்பர்.

# 66. வினைத்தூய்மை

651. துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

653. ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

654. இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

655. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

656. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

657. பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

658. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

659. அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

660. சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.

**பொருள்:-** வினைத்தூய்மை – வினையைக் குற்றம் பயவாமற் செய்தல். 651. ஆக்கம் – செல்வம், தரூஉம் – தரும். 652. ஒருவுதல்– தவிர்தல். 653. ஓஒதல் – ஓவுதல் – தவிர்தல், ஒளிமாழ்கும் – புகழ் கெடவரும். ஆஅதும் – ஆதும் – மேலாகக் கடவோம். 654. இளிவந்த– பிறரால் இகழப்படும் செயல்கள். நடுக்கு அற்ற – துளக்கமற்ற – தடுமாற்ற மில்லாத, காட்சியவர் – அறிவினையுடையவர். 655. எற்று – யான் செய்தது எத்தன்மையது. இரங்குவ – தானே இரங்கும் செயல்களை, மற்று அன்ன செய்யாமை – பின் இரங்காமை; பின் இரங்கப்படும் காரியங்களைச் செய்யாமை. 657. மலைந்து – சுமந்து, எய்திய – பெற்ற. கழிநல்குரவு – மிக்க வறுமை, தலை – உயர்ந்தது. 658. கடிந்த – நீக்கிய, ஒரார் – ஒழியாது, பீழை–துன்பம். 659. அழ– பிறர்அழ. அழப்போம் – தாம் அழப் போகும், பிற்பயக்கும் – பின்னர் வந்து பயன் கொடுக்கும். நற்பாலவை – தூய வினையான் வந்த பொருள். 660. சலத்தால் – வஞ்சத்தால்; தீய வினைகளால், ஏமார்த்தல் – ஏமம் செய்தல்; (ஏமம்–பாதுகாவல்) இரீஇயற்று—(நெடுங்காலம்) இருப்பச் செய்தலோடு ஒக்கும்.

# 67. வினைத்திட்பம்

661. வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.
662. ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.
663. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை
எற்றா விழுமம் தரும். [இடைக்கொட்கின்
664. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.
665. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.
666. எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.
667. உருவுகண் டெள்ளாமை வேண்டும்
[உருள்பெருந்தேர்க்(கு)
அச்சாணி அன்னா ருடைத்து.
668. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.
669. துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை.
670. எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

பொருள்:— 661. வினைத்திட்பம் – வினை செய்தற்கண் திண்மை, பிற – அதற்குத் திண்மை என்று சொல்லப்படா. 662. ஊறொரால் – பழுதுபடும் வினைகளைச் செய்யாமை, ஒல்காமை – (வினைபழுதுபட்ட விடத்துத்) தளராமை, இவ்விரண்டின் ஆறு–இவ்விரண்டிலே பட்டது. ஆய்ந்தவர் கோள் – நீதி ஆராய்ந்த அமைச்சரது துணிபு. 663. கடைக் கொட்கச் செய்தக்கது – செயப்படும் வினையை முடிவில் புலப்படும் வகை முன்னெல்லாம் மறைந்துச் செய்வது. ஆண்மை – (வினைத்) திட்பம். இடைக் கொட்கின் – இடையே புலப்படுமாயின், எற்றா விழுமம் – நீங்காத இடும்பை. 665. வீறு – சிறப்பு. மாண்டார் – மாட்சிமைப்பட்ட அமைச்சர். வேந்தன் கண் – அரசனிடத்து, ஊறெய்தி– உறுதலை எய்தலான் ( – உற்று ) உள்ளப்படும் – எல்லாராலும் நன்கு மதிக்கப்படும். 666. எய்துப — எய்துவர். 667. எள்ளாமை வேண்டும்–இகழ்தலை ஒழிக. 668. கண்ட–துணிந்த, தூக்கம் கடிந்து – (காலம்) நீட்டித்தலை ஒழிந்து.

# 68. வினைசெயல்வகை

671. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.
672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.
673. ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.
674. வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீஎச்சம் போலத் தெறும்.
675. பொருள்கருவி காலம் வினைஇடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.
676. முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.
677. செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளம் கொளல்
678. வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.
679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.
680. உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

பொருள்:- 671. அத்துணிவு – அவ்வாறு துணிந்தவினை – தாழ்ச்சியுள் தங்குதல் – நீட்டித்தலின் கண் கிடக்குமாயின். 672. தூங்கிச் செயற்பால – தாழ்த்துச் செய்ய வேண்டிய செயல்கள். தூங்குக – தாழ்த்துச் செய்க. 673. ஒல்லும் வாய்–இயலும் இடம், வினை – போர். ஒல்லாக்கால் – இயலாத இடத்து, செல்லும்வாய் – முடிவதோர் உபாயம். 674. எச்சம் – ஒழிவு – சேஷம் – குறை, தெறும்–கெடுக்கும். 675. இருள் தீர – மயக்கம் அற. 676. முற்றி – முடிந்தால் 677. உள் அறிவான் – முன்செய்து போந்தவன், உள்ளம் கொளல்–கருத்தினைத் தான் அறிதல். 678. வினையாக்கிக் கோடல் – பிறிதும் ஓர்வினையை முடித்துக்கொள்க. யாத்தற்று–பிணித்தது போலும். 679. விரைந்தது– விரைந்து செய்யப்படும். ஒட்டார் – பகைவர்க்குப் பகைவர். ஒட்டிக் கொளல்–நட்பாக்கிக் கொள்ளுதல். 680. உறை–ஆளும் இடம். சிறியார் – சிறியராய அமைச்சர், உள்நடுங்கல் — தம் நாடு நடுங்குதல், குறை – சந்து (– சமாதானம்)

# 69. தூது

681. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

682. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்(கு)
இன்றி யமையாத மூன்று.

683. நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

684. அறிவுரு ஆராய்ந்த கல்விஇம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.

686. கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்
தக்க தறிவதாம் தூது.

687. கடன்அறிந்து காலம் கருதி இடனறிந்(து)
எண்ணி உரைப்பான் தலை.

688. தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.

689. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

690. இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்(கு)
உறுதி பயப்பதாம் தூது.

பொருள்:- 681. அன்பு – சுற்றத்தார் மாட்டு அன்பு. வேந்து அவாம் – அரசர் சாதி விரும்பும். 682. அன்பு – தன் அரசன் மாட்டு அன்பு. அறிவு – அரசனுக்கு ஆவன அறியும் அறிவு. 683. நூலார் – நீதிநூல் வல்ல அமைச்சர். வேலார் – வேலையுடைய வேற்றரசர். 684. உரு – கண்டார் விரும்பும் தோற்றப்பொலிவு. அறிவு – இயற்கையாகிய அறிவு. வினை – தூது வினை. 685. தொக – தொகுத்து. தூவாத–விரும்பாத சொற்களை. நக — மகிழுமாறு. 686. கண் — செயிர்த்த நோக்கு. செல — மனங்கொள. தக்கது — முடிக்கத் தக்க உபாயம். 687. கடன் –செய்யும் முறைமை. காலம் — சமயம். 688. வழி உரைப்பான்- தன் அரசன் வார்த்தையை அவன் சொல்லியவாறே வேற்றரசர்க்குச் சென்று சொல்பவன். 689. விடுமாற்றம் — அரசன் சொல்லி விட்ட வார்த்தை. வடுமாற்றம் — தாழ்வான வார்த்தை. வன்கணவன் — திண்மையை உடையவன். 690. எஞ்சாது — அஞ்சியொழியாது.

# 70. மன்னரைச்சேர்ந்தொழுகல்

691. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.
692. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய ஆக்கந் தரும்.
693. போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.
694. செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.
695. எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்கால் கேட்க மறை.
696. குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.
697. வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.
698. இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.
699. கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத
துளக்கற்ற காட்சி யவர். [செய்யார்
700. பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்
கெழுதகைமை கேடு தரும்.

பொருள்;- 691. போல்க - போன்று நிற்க. 692. விழைப - விரும்புவனவற்றை. விழையாமை - விரும்பாதிருத்தல். மன்னிய — நிலைபெற்ற. 693. போற்றின் - காக்கக் கருதின். அரியவை - அரிய பிழைகள். போற்றல் - தம்மிடம் வாராமல் காக்க. கடுத்தபின் - ஐயுற்ருல். 694. செவிச்சொல் - செவிக்கண் சொல்லுதல். சேர்ந்த நகை — ஒருவன் முகம் நோக்கிச் சிரித்தல். அவித்து ஒழுகல் — தவிர்ந்து ஒழுகல் வேண்டும். பெரியாரகத்து—அரசர் அருகிருந்தால். 695. ஓரார் – கேளாது. விட்டக்கால் — சொல்லியபொழுது. மறை— இரகசியம். 696. வேட்ப — விரும்புமாறு. சொலல் — சொல்லுக. 697. வினையில — பயனில்லாதவற்றை. 698. இன — இத்தன்மை யாகிய. இகழார் — இகழாமல். 699. கொளப்பட்டேம் — அரசனால் நன்கு மதிக்கப் பட்டோம். கொள்ளாத - (அரசன்) விரும்பாதவற்றை, துளக்கற்ற — நிலைபெற்ற, காட்சியவர் — அறிவினையுடையார், 700. கெழுதகைமை — உரிமை.

# 71. குறிப்பறிதல்

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக் கணி.

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

703. குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.

704. குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போர் அனையரால் வேறு.

705. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
என்ன பயத்தவோ கண்.

706. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்.

708. முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.

709. பகைமையும் கேண்மையும் கண்உரைக்கும் கண்ணின்
வகைமை உணர்வார்ப் பெறின்.

710. நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்ல தில்லை பிற.

பொருள் :– 701. வையக்கு – உலகத்தார்க்கு. 702. படாஅது— படாது, அகத்தது – மனத்தில் நிகழ்வதனை. 703. குறிப்பின் – பிறர் முகக்குறிப்பினாலே, குறிப்புணர்வார் — அவர் மனக்குறிப்பு உணர்வாரை. 704. ஏனை – குறிப்பு அறியாதவர், உறுப்பு ஓரனையர்– உறுப்பால் ஒரு தன்மையராக இருப்பினும். வேறு – அறிவான் வேறு (விலங்கு ஆவர்). 706. கடுத்தது – மிக்கதனை. 707. முதுக்குறைந்தது– அறிவுமிக்கது, முந்துறும் — முற்பட்டு நிற்கும். 709. கேண்மை — நட்பு, வகைமை — வேறுபாட்டின் தன்மை. 710. நுண்ணியம் — யாம் நுண்ணறிவுடையோம்.

# 72. அவையறிதல்

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்.

713. அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

714. ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்.

715. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

716. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.

717. கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல்தெரிதல் வல்லா ரகத்து.

718. உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று.

719. புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்.

720. அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தம்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல்.

பொருள் :- 711. சொல்லின் தொகை-சொற்களின் பலவகைகள் (-செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொல்.) 713. அறியார்-அறியாமல், வல்லதூஉம்இல் - கற்றுவல்ல கலையும் அவர்க்கு இல்லை. 714. ஒளியார் — அறிவான் மிக்கவர், ஆதல் — ஆக, வெளியார் — புல்லறிவாளர், வான்சுதை - வெண்மையான சுண்ணாம்பு, கொளல் - கொள்க. 715. முதுவருள் — தம்மின்மிக்கார் அவைக்கண், முந்து கிளவா — முற்பட்டு ஒன்றனைச் சொல்லாத, செறிவு — அடக்கம். 716. வியன்புலம் — அகன்ற நூற்பொருள்களை, இழுக்கு -- சொல் இழுக்குப்படுதல். 717. கசடுஅற — வழுப்படாமல், தெரிதல் — ஆராய்தல். 718. உணர்வதுஉடையார் - தாமே உணரவல்ல அறிவினையுடையார், சொல்லல் - சொல்லுதல். 719. புல்லவை - புல்லறிவாளர் அவை, பொச்சாந்தும் - மறந்தும், செல — மனம் கொள்ள. 720. அங்கணத்துள் - தூய்தல்லாத முற்றத்துள், தங்கணத்தர் அல்லார் — புல்லறிவாளர்.

# 73. அவையஞ்சாமை

721. வகைஅறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர்.

722. கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

723. பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர்.

724. கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

725. ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு.

726. வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

727. பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்(து)
அஞ்சு மவன்கற்ற நூல்.

728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

729. கல்லா தவரின் கடைஎன்ப கற்றறிந்தும்
நல்லார் அவைஅஞ்சு பவர்.

730. உளர்எனினும் இல்லாரொ டொப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

பொருள் :— 721. வகை – கற்றுவல்ல அவை, அல்லா அவை என்னும் வகை. 722. கற்ற — கற்றவற்றை, செல — அவர் மனம் கொள்ளும் வகை. 723. எளியர் — பலர், அரியர் — சிலர். 724. மிக்காருள் — மிக்கற்றாரிடத்து, கொளல் — அறிந்துகொள்க. 725. ஆற்றின் – சொல் இலக்கண நெறியானே, அளவு — அளவை நூலை, மாற்றம் — மறுமாற்றம். 726. வன்கண்ணர்அல்லார் — அஞ்சுபவர். 728. பயம் – பயன். 730. களன் – அவைக்களம்.

# 74. நாடு

731. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

732. பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு.

733. பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்(கு)
இறையொருங்கு நேர்வது நாடு.

734. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.

735. பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

736. கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு.

738. பிணிஇன்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்கிவ் வைந்து.

739. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம்தரும் நாடு.

740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

பொருள் :- 731. தள்ளா – குன்றாத, விளையுள் – இங்குஉழவர். 732. பெட்டக்கதாகி – விரும்பத்தக்கதாகி, அருங்கேட்டால் – கேடு இன்மையோடு, ஆற்ற – மிக. 733. பொறை – பிறநாடுகள் பொறுத்த பாரம் (—மக்கள் தொகுதி முதலியன). இறைவற்கு — அரசனுக்கு, நேர்வது – கொடுப்பது. 734. உறு – மிக்க, ஓவா – நீங்காத, செறு– அழிவுசெய்யும். 735. பல்குழு — மாறுபட்ட உணர்ச்சியுடைய கூட்டத்தார். 736. அறியா – அறியாததாய். 738. பிணி – நோய், ஏமம் – காவல். 739. நாடா – தேடவேண்டாத, நாட – தேடிவருந்த. 740. ஆங்கு அமைவு எய்தியக்கண்ணும் – மேற்சொல்லிய குணங்கள் எல்லாவற்றாலும் நிறைந்திருந்ததாயினும்.

# 75. அரண்

741. ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தன்
போற்று பவர்க்கும் பொருள்.

742. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்
காடும் உடைய தரண்.

743. உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்.

744. சிறுகாப்பின் பேரிடத்த தாகி உறுபகை
ஊக்கம் அழிப்ப தரண்.

745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்
நிலைக்கெளிதாம் நீர தரண்.

746. எல்லாப் பொருளும் உடைத்தாய் இடத்துதவும்
நல்லாள் உடைய தரண்.

747. முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்ல தரண்.

பொருள் :- 741. ஆற்றுபவர் - பகைமேல் செல்வார், பொருள் - சிறந்தது, தன்போற்றுபவர் - (மதிலாகிய) தன்னையே அடைவார். 744. சிறுகாப்பின் - (வாயில் வழி முதலிய) காக்கவேண்டிய இடங்கள் சிறிதாய், பேரிடத்தது ஆகி-மதிலகம் பெரிய இடத்தை உடையதாய். 745. கொண்ட கூழ்த்தாகி — பலவகை உணவுகளையுடையதாய், அகத்தார் -மதிலுக்குள் இருப்பவர், நிலைக்கு—போர்செய்து நிற்பதற்கு. நீரது - தன்மையுடையது. 746. நல்லாள் - நல்லவீரர். 747. அறைப் படுத்தும் - அகத்தோரை அவர் தெளிந்தோரைவிட்டு (ஏமாற்றி)த் திறப்பித்தும். 748. முற்றுஆற்றி முற்றியவர் — முற்றுகை செய்த புறத்தோர், பற்றியார் - அரணில் இருப்பவர் (- அகத்தோர்). பற்று ஆற்றி — பற்றிய இடம் விடாதே. 749. முனைமுகத்து — போர் தொடங்கின அளவிலே, மாற்றலர் - பகைவர், சாய - கெடும்படியாக, மாண்டது - (சுருங்கைவழி முதலிய) மாட்சிமையுடையது.

# 76. பொருள் செயல்வகை

751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.

752. இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு.

753. பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று.

754. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

755. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

756. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

757. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு.

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்
உண்டாகச் செய்வான் வினை. தொன்(று)

759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனின் கூரிய தில்.

760. ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு.

பொருள் :— 751. பொருளல்லவரை – ஒரு பொருளாக மதிக்கப் படாதாரையும். 752. எள்ளுவர் – இகழ்வர். 753. பொய்யாவிளக்கம்– நந்தாவிளக்கு. இருள் — பகை என்னும் இருள். 754. ஈனும் — கொடுக்கும். 755. புல்லார் புரளவிடல் – அரசர் பொருந்தாது கழிய விடுக. 756. உறுபொருள் – தானே வந்த பொருள், உல்கு–சுங்கம், ஒன்னார் – பகைவர், தெறுபொருள் – வென்றுகொண்ட திறை. 759. செறுநர் — பகைவர், எஃகு — படைக்கலம். 760. காழ்ப்ப — மிக, இயற்றியார் – படைத்தார், எண்பொருள் – எளியபொருள், ஏனை இரண்டும் — அறமும் இன்பமும்.

# 77. படைமாட்சி

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை.

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லால் அரிது.

763. ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

765. கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.

766. மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.

767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.

768. அடற்றகையும் ஆற்றலும் இல்எனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.

769. சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்
இல்லாயின் வெல்லும் படை.

770. நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை
தலைமக்கள் இல்வழி இல்.

பொருள் :— 761. உறுப்பு – யானை, குதிரை, தேர், காலாள் என்ற உறுப்புக்கள் பொருந்தி. வெறுக்கை — செல்வம். 762. உலைவிடத்து — அரசர் கெடும் இடத்து. வன்கண் — அஞ்சாமை. தொல்படை – முன்னோரைத் தொடங்கிவரும் மூலப்படை. 763. ஒலித்தக்கால் – ஒலித்தால், உவரி–கடல்போல. 764. அழிவுஇன்று– கெடுதல் இன்றி, அறைபோகாது – பகைவரால் கீழ் அறுக்கப்படாது. வன்கணது – அஞ்சாமையுடையது. 765. கூற்று–இயமன், உடன்று– கோபித்து. 766. மாண்ட வழிச்செலவு – முன் வீரர் சென்ற நல்ல வழியிற் செல்லுதல், தேற்றம் – அரசனால் தேறப்படுதல், ஏமம் – அரண். 767. தார்–தூசிப்படை (–முதலிற் செல்லும் படை). தாங்கி– தடுத்து, தலைவந்த – தன்மேல் வந்த. 768. அடற்றகை–பகைவரைக் கொல்லும் தறுகண்மை, படைத்தகை – தோற்றப் பொலிவு (படை யழகு). பாடு — பெருமை. 769. சிறுமை — (படை) தேய்ந்து சிறிதாதல் – செல்லாத்துனி–மனத்தினின்று நீங்காத வெறுப்பு. 770. நிலைமக்கள் – நிலையுடைய வீரர், தானை – சேனை, தலைமக்கள்–தலைவர்.

# 78. படைச்செருக்கு

771. என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை
முன்னின்று கல்நின் றவர்.
772. கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.
773. பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு
774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.
775. விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.
776. விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.
777. சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.
778. உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்.
779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.
780. புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா(டு)
இரந்துகோட் டக்க துடைத்து.

பொருள் :- 771. என்னை–என் தலைவன், தெவ்விர்–பகைவர்களே, கல் – நடுகல். 772. கானம் — காடு. 773. தறுகண் — அஞ்சாமை, ஒன்று – ஒரு தாழ்வு, உற்றக்கால் – வந்ததாயின், ஊராண்மை – உபகாரியாந்தன்மை, எஃகு – கூர்மை. 774. பறியாநகும் – பறித்து மகிழும். 775. ஓட்டு – புறங்கொடுத்தல், வன்கணவர் – வீரர். 776. வழுக்கினுள்வைக்கும் – பயன்படாது கழிந்த நாளுக்குள்ளேவைக்கும், விழுப்புண் – முகத்தினும் மார்பினும் பட்டபுண். 777. இசை –புகழ், வேண்டா உயிரார் – உயிர்வாழாதவர், கழல்யாப்பு – கழல்கட்டுதல், காரிகை நீர்த்து – அலங்கார நீர்மையையுடையது. 778. உறின் — போர்பெறின், செறினும் — தடுப்பினும், சீர் — வீரம். 779. இழைத்தது – கூறியவஞ்சினம், இகவாமை – தப்பாமல், பிழைத்தது– தப்பியது, ஒறுக்கிற்பவர் – பழிக்கவல்லவர். 780. புரந்தார் –அரசன், சாகிற்பின் — சாவப்பெறின், சாக்காடு — சாதல், இரந்து கோட்டக்கது – யாசித்தாயினும் கொள்ளும் தகுதியை உடையது.

# 79. நட்பு

781. செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.
782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.
783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
784. நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.
785. புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.
786. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு.
787. அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.
788. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.
789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்று நிலை.
790. இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

பொருள் :— 781. அது – நட்பு, காப்பு – காவல். 782. பிறை நிறைநீர — பிறை போல நிறையும் தன்மையுடையன, நீரவர் — அறிவுடையார், கேண்மை — நட்பு, மதிப்பின்னீர — நிறைந்த மதிபோலப் பின்குறையும் தன்மைய. 783. நவில்தொறும் – படிக்கும் தோறும், பயில்தொறும் – பழகுந்தோறும். 784. நட்டல் – நட்புச் செய்தல், மிகுதிக்கண் — வேண்டாத செய்கை உளதாய வழி. 785. புணர்ச்சி – ஒருதேயத்தார் ஆதல். 787. அழிவினவை – கேட்டினைத் தரும் தி நெறி, ஆறுஉய்த்து — நன்னெறியில் செலுத்தி, அழிவின் கண் — தெய்வத்தால் கேடுவந்த விடத்து, அல்லல் உழப்பது — துன்பத்தை உடன் அனுபவிப்பது. 788. உடுக்கை–ஆடை, இடுக்கண்– துன்பம். 789. கொட்பு – திரிபு – சுழற்சி, ஒல்லும்வாய் – செல்லு மிடம், ஊன்றும் — அறம்பொருள்களில் தளராமைதாங்கும். 790. இனையர் – இத்தகைய அன்பினர், இன்னம்யாம் – யாம் இவர்க்கு இத்தன்மையோம்.

# 80. நட்பாராய்தல்

791. நாடாது நட்டலின் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

793. குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

794. குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

795. அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.

796. கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

797. ஊதியம் என்ப தொருவர்க்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

798. உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்.

800. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

பொருள் :— 791. நாடாது – ஆராயாது, நட்டலின் — நட்புச் செய்தல் போல, நட்டபின் — நட்புச்செய்தபின், வீடு — விடுதல். 792. கடைமுறை — முடிவில். 793. குன்றாஇனன் — குறைவற்ற சுற்றம், நட்புயாக்க–நட்புச்செய்க. 795. அல்லது -உலகவழக்கல்லது (செய்யக்கருதின்) கொளல் – கொள்க. 796. கிளைஞர் – நட்பினர். 797. ஒரீஇ – நீங்கி, ஊதியம் – லாபம். 798. உள்ளற்க – நினையாதே, உள்ளம் சிறுகுவ – ஊக்கம் சுருங்குவதற்குக் காரணமாய வினைகளை. ஆற்றறுப்பார் – கைவிடுவார். 799. அடுங்காலை – இறக்கும்பொழுது. உள்ளினும் — நினைப்பினும். 800. மருவுக — கொள்க, ஈத்தும் — கொடுத்தும், ஒருவுக – விடுக.

# 81. பழைமை

801. பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்(கு)
உப்பாதல் சான்றோர் கடன்.

803. பழகிய நட்பெவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

805. பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

806. எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

807. அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

808. கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

810. விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

**பொருள் :—** *801.* கிழமை – உரிமை, கீழ்ந்திடா – சிறிதும் விலக்காத. *802.* கெழுதகைமை - உரிமை. உப்பு-இனிமை, கடன் - இயல்பு. *803.* அமையாக்கடை – உடம்படாராயின். *804.* விழை தகையான் – விரும்பப்படும் தன்மைபற்றி. *805.* பேதைமை – அறியாமை, பெருங் கிழமை – மிக்க உரிமை. நோதக்க – வெறுக்கத்தக்கனவற்றை. *806.* எல்லை – வரம்பு – பழைமை, துறவார் – விடார், தொலைவிடத்தும் – கேடுவந்த விடத்தும். *807.* அழிவந்த – கேடுவருவன. *808.* கேள் இழுக்கம் – நண்பர் செய்த பிழை, நாள் – பயன்பட்ட நாள். *809.* வழி வந்த – பழையதாய் வந்த, விடாஅர் – விடாதவரை, விழையும் – விரும்பும். *810.* விழையார் – பகைவர்.

# 82. தீநட்பு

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

812. உறின்நட் டறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.

313. உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

814. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

815. செய்தேமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

816. பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.

817. நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

818. ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்,

819. கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

820. எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

பொருள் :— தீநட்பு - தீயோர் நட்பு. 811. போலினும்-போன்று அன்புடையராய் இருப்பினும். குன்றல் – தேய்தல் 812. உறின் – பயன் கண்டால், நட்டு – நட்புச் செய்து, அறின் – பயன் இல்லாத பொழுது, ஒரூஉம் – நீங்குகின்ற. 813. உறுவது – பயன் அளவு, நட்பு – நண்பர், பெறுவது கொள்வார் - பொது மகளிர், நேர்–தம்முள் ஒப்பர். 814. அமரகத்து – போரில், ஆற்றறுக்கும் – கைவிடும் ( – விழ்த்துச் செல்லும்) மா – குதிரை, தமரின் – தமர் ஆவதினும். 815. ஏமம் சாரா – அரண் ஆகாத, புன்கேண்மை – தீநட்பு. 816. பெருங் கெழீஇ(ய) – மிகச் செறிந்த, ஏதின்மை – பகைமை, உறும் – நன்மை பயக்கும். 817. நகை வகையர்-காமுகர் வேழம்பர் முதலானோர். 818. உடற்றுபவர் – கெடுப்பவர், ஒல்லும் – தம்மால் செய்ய முடியும். 820. குறுகுதல் ஓம்பல் – அடைதலை நீக்குக, கெழீஇ – பொருந்தி ( – நட்புச் செய்து).

# 83. கூடாநட்பு

821. சீரிடம் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

823. பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணுர்க் கரிது.

824. முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னு
வஞ்சரை அஞ்சப் படும்.

825. மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்
சொல்லினுல் தேறற்பாற் றன்று.

826. நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.

827. சொல்வணக்கம் ஒன்னுர்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.

828. தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும் ஒன்னுர்
அழுதகண் ணீரும் அனைத்து.

829. மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.

830. பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்(டு)
அகநட் பொரீஇ விடல்.

பொருள் ;— 821. சீரிடம் – வாய்ப்பான இடம், பட்டடை – கொல்லன் உலைக்களத்திலுள்ள ஒரு கருவி, நேரா நிரந்தவர் – மனத்தினுல் ஒவ்வாது புறத்தினுல் ஒத்தார் போன்று உள்ளவர். 823. கற்றக் கடைத்தும் - கற்ற விடத்தும், மாணுர்க்கு - பகைவர்க்கு. 824. நகாஅ- சிரித்து. 826. ஒட்டார்–பகைவர், ஒல்லை – விரைவில், உணரப்படும்– நன்மை பயவாமை அறியப்படும். 827. ஒன்னுர் — பகைவர், கொள்ளற்க – கொள்ளாதே. 829. எள்ளுவாரை — இகழ்பவரை சா – நட்புச்சாகும் வண்ணம். புல்லற்பாற்று – பொருந்துக. 830. ஒரீஇவிடல் – நீங்க விடுக.

# 84. பேதைமை

831. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்(டு)
ஊதியம் போக விடல்.

832. பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கண் செயல்.

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

834. ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தான்அடங்காப்
பேதையின் பேதையார் இல்.

835. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.

836. பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

837. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வம் உற்றக் கடை.

838. மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

பொருள் :— பேதைமை – யாதும் அறியாமை. 831. ஏதம்–கேடு பயப்பன, ஊதியம் – செல்வம் புகழ் முதலியன. 832. காதன்மை – விருப்பம். கைஅல்லதன்கண் – ஆகாத ஒழுக்கத்தின் கண். 833. நாரின்மை – அன்பு இல்லாமை. 835. அளறு – நரகம். 836. பொய் படும் – வினை முடியாமல் பொய்த்துப்போகும். புனைபூணும் – சிறைப் படும். கை – செய்யும் முறைமை. 837. ஏதிலார் – அயலார். தமர் – உறவினர், உற்றக்கடை – பெற்ற இடத்து. 838. மையல் ஒருவன் – பித்து ஏறியவன். களித்தற்றால்-கள்ளுண்டு களித்தாற்போலும். 839. பெரிதினிது–மிகஇனிது. பீழை–துன்பம். 840. கழாஅக்கால்–கழுவாத கால், குழாஅத்து – சபையில், புகல் – புகுதல்.

# 85. புல்லறிவாண்மை

841. அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு.

842. அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.

843. அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

844. வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு.

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.

846. அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின்
குற்றம் மறையா வழி.

847. அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

848. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஓம் அளவுமோர் நோய்.

849. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு.

850. உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்(து)
அலகையா வைக்கப் படும்.

பொருள் :— புல்லறி வாண்மை – தான் சிற்றறிவினனாயிருந்தே தன்னைப் பேரறிவினனாக மதித்து உயர்ந்தோர் கூறும் உறுதிச் சொல் கொள்ளாமை. 841. பிறிதின்மை – பொருளில்லாமை. 843. பீழிக்கும் பீழை – வருத்தும் வருத்தம், செறுவார் – பகைவர். 844. வெண்மை – அறிவின்மை. ஒண்மை – நல்லறிவு, செருக்கு – மயக்கம். 845. கல்லாத – கல்லாத நூல்கள், மேற்கொண்டு–கற்றாராக மேற்கொண்டு வல்லதூஉம் – கற்றதனையும். 847. அருமறை சோரும் – அரிய இரகசியத்தை வெளிப்படுத்துகிற, பெருமிறை – மிக்கவருத்தம். 848. ஏவவும் – சொல்லவும், செய்கலான் – செய்யான், போஓம்அளவும்–போகுமளவும். 849. காணாதான் — அறியாதானை, காட்டுவான்— அறிவிக்கப்புகுபவன், 850. அலகையா — பேயென்று.

# 86. இகல்

851. இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

852. பகல்கருதிப் பற்ரு செயினும் இகல்கருதி
இன்னுசெய் யாமை தலை.

853. இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

854. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

855. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்.

856. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

857. மிகன்மேவல் மெய்ப்பொருள் காணுர் இகல்மேவல்
இன்னு அறிவி னவர்

858. இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகலூக்கின் ஊக்குமாம் கேடு.

859. இகல்காணுன் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

860. இகலானும் இன்னுத எல்லாம் நகலானும்
நன்னயம் என்னும் செருக்கு.

**பொருள் :-** இகல்-மாறுபாடு. 851. பகல்-கூடாமை, பண்பின்மை-தீக்குணம், பாரிக்கும்—வளர்க்கும். 852. பற்ரு – வெறுப்பன. 853. எவ்வம்—துன்பம், தவல்இல்லா—கேடில்லாத. தாவில் விளக்கம் – குற்றமற்றஒளி — புகழ். 855. மிகல்ஊக்கும் — வெல்லநினைக்கும். 856. தவல்–செல்வம் அழிதல், கெடல்–இறத்தல். 857. மிகல்மேவல்–வெற்றிபொருந்துதலையுடைய. 858. எதிர்சாய்தல்–எதிர்தலைஒழிதல்–சாய்ந்து ஒழுகுதல். 860. நகலான் — நட்பினுல், ஆம் — ஆகும், நன்னயம் —நல்லநீதி, செருக்கு — பெருஞ்செல்வம்,

# 87. பகைமாட்சி

861. வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா
மெலியார்மேல் மேக பகை.
862. அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலான் துப்பு.
863. அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு.
864. நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கும் எளிது.
865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.
866. காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணாமை பேணப் படும்.
867. கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.
868. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்(கு)
இனனிலனாம் ஏமாப் புடைத்து.
869. செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா
அஞ்சும் பகைவர்ப் பெறின்.
870. கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்
ஒல்லானை ஒல்லா தொளி.

**பொருள் :—** பகைமாட்சி — பகை கொள்ளுங்கால் தனக்கு நன்மைபயக்குமாறு கொள்ளுதல், 861. மாறேற்றல் – பகையாய் எதிர்தல். ஓம்புக – விடுக, மேக – விரும்புக. 862. ஆன்ற – வலிய, துவ்வான் – வலியிலன், ஏதிலான் துப்பு – பகைவன் வலியினை, என் பரியும் – எங்ஙனம் தொலைக்கும். 863. தஞ்சம் – மிகவும். 865. வழி– நீதிநூலிற் சொல்லப்பெற்ற வழி, வாய்ப்பன – நீதிநூல் விதித்த தொழில்கள், பற்றார்–பகைவர். 866. பேணாமை – பகைமை, பேணப் படும்–விரும்பிக்கொள்ளப்படும். 867. அடுத்து–வினையைத் தொடங்கி. மாணாத – அவ்வினைக்கு ஏலாதன, கொடுத்தும் – சிலபொருள் அழியக் கொடுத்தும். 868. இனன் – துணை, ஏமாப்புடைத்து – துணையாதலை யுடைத்து. 869. சேண் இன்பம் இகவா – உயர்ந்த இன்பங்கள் நீங்கா. 870. வெகுளும்– பகைத்தலான் வருகிற. சிறுபொருள்–எளியபொருள் (–எளிய முயற்சியான் வரும் பொருள்) ஒல்லானை–பொருந்ாதவனை, ஒளி – புகழ்.

# 88. பகைத்திறம்தெரிதல்

871. பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

872. வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.

873. ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற் றுலகு.

875. தன்துணை இன்றால் பகைஇரண்டால் தானொருவன்
இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.

876. தேறினும் தேறா விடினும் அழிவின்கண்
தேறான் பகாஅன் விடல்.

877. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.

878. வகைஅறிந்து தன்செய்து தன்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு.

879. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

880. உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

பொருள் :— 871. நகையேயும் – விளையாட்டின் கண்ணேயும், 872. வில்லேருழவர் – வீரர், சொல்லேருழவர் – புலவர். 873. ஏமுற்றவரினும் – பைத்தியம் பிடித்தவனைக் காட்டிலும், ஏழை – அறிவிலன். 874. தகைமை – பெருமை. 875. அவற்றின் – அப்பகை இரண்டனுள் 876. தேறான் பகாஅன்விடல் – கூடாது நீக்காது இடையே விட்டு வைக்க. 877. நோவற்க — தன்நோவு சொல்லற்க. மேவற்க – கொள்ளற்க. மென்மை – தன்வலியின்மையை. 879. களையுநர் – களைபவர், காழ்த்தவிடத்து – முதிர்ந்த நிலையில். 880. மன்ற – உறுதியாக, செயிர்ப்பவர் – பகைவர். செம்மல் – தலைமை – செருக்கு.

# 89. உட்பகை

881. நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்
இன்னாவாம் இன்னா செயின்.

882. வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

883. உட்பகை அஞ்சித்தன் காக்க உலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

884. மனம்மாணா உட்பகை தோன்றின் இனம்மாணா
ஏதம் பலவும் தரும்.

885. உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்
முறையான்
ஏதம் பலவும் தரும்.

886. ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது.

887. செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.

888. அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு(து)
உட்பகை உற்ற குடி.

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினும்
உட்பகை உள்ளதாம் கேடு.

890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போ டுடனுறைந் தற்று.

பொருள் ;— 881. தமர்நீர் – சுற்றத்தார் இயல்பு. 882. கேள் – உறவு. தொடர்பு – நட்பு. 883. உலைவிடத்து – தளர்ச்சிவந்த விடத்து. மட்பகையின்–குயவன் மட்கலத்தை அறுக்கும் கருவிபோல, மாணத் தெறும் – தப்பாமல் கெடுப்பர். 884. ஏதம் – குற்றம். 885. உறல் – உறவு. இறல் – இறத்தல். 886. ஒன்றாமை – பகைமை. ஒன்றியார் கண்படின்–பொருந்தியவரிடத்துண்டாயின். பொன்றாமை–இறவாமை. 887. கூடாது – அகத்துத்தம்முள் கூடார். 888. பொருத – தேய்க்கப் பட்ட. பொன் – இரும்பு. உரம்தேயும் – வலிதேயும். 889. எட்பகவு அன்ன – எள்ளின் பிளவைப் போன்ற. 890. உடம்பாடு – மனப் பொருத்தம். குடங்கர்–குடில்; குடம்.

# 90. பெரியாரைப் பிழையாமை

891. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை.

892. பெரியாரைப் பேணா தொழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்.

893. கெடல்வேண்டின் கேளாது செய்க அடல்வேண்டின்
ஆற்று பவர்கண் இழுக்கு.

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்(கு)
ஆற்றாதார் இன்னா செயல்.

895. யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

896. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்
தகைமாண்ட தக்கார் செறின்.

898. குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

899. ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

900. இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

**பொருள் :—** 891. ஆற்றுவார் – எடுத்துக்கொண்ட காரியங்களை முடிக்க வல்லவர். போற்றலுள் எல்லாம் தலை – தம்கண் தீங்கு வாராமல் காப்பார் செய்யும் காவல்கள் எல்லாவற்றினும் மிக்கது. 892. பேரா இடும்பை – நீங்காத துன்பம். 893. அடல் – கொல்லுதல். 894. விளித்தற்றால்–அழைத்தாற் போலும். ஆற்றாதார் – வலிமையில்லாதவர், செயல் – செய்தல். 895. யாண்டுச்சென்று – எங்கே சென்றாலும், துப்பின் – வலிமையுடைய. 897. வகைமாண்ட–எல்லா வகையாலும் மாட்சிமைப்பட்ட. 898. குன்ற – கெட, நிலத்து நின்றன்னார் – நிலத்து நிலை பெற்றாற்போன்ற செல்வர். 899. ஏந்திய – உயர்ந்த, வேந்தன் – இந்திரன். 900. இறந்தமைந்த – மிகப்பெரிய, சிறந்தமைந்த சீரார் – மிக்கதவத்தினையுடையார்.

# 91. பெண்வழிச்சேறல்

901. மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.

902. பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

903. இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்.

904. மனையாளை அஞ்சும் மறுமைஇ லாளன்
வினையாண்மை வீறெய்தல் இன்று.

905. இல்லாளை அஞ்சுவான் அஞ்சுமற் றெஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்.

906. இமையாரின் வாழினும் பாடிலரே இல்லாள்
அமையார்தோள் அஞ்சு பவர்.

907. பெண்ஏவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை உடைத்து.

908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

909. அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்கண் இல்.

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.

**பொருள் :—** 901. மனை–மனைவி, வினை-பொருள் செய்தல், அது–அவ்வின்பம். 902. ஆக்கம் – செல்வம், 903. இயல்பின்மை – அச்சம் 904. வீறு – பெருமை, இன்று - இல்லை. 906. இமையாரின் – தேவர் போல, பாடு–பெருமை, அமைஆர்–மூங்கில் போன்ற. 908. நட்டார் குறை – நட்புச்செய்தார் உற்ற துயரம், நன்றாற்றார்– அறம் செய்யார். நன்னுதலாள்–மனைவி, பெட்டாங்கு – விரும்பியவாறு. 909. பிறவினை- இன்பம். 910. எண் – சூழ்ச்சி, இடன் – செல்வம். எஞ்ஞான்றும் – எக்காலத்தும்

# 92. வரைவின் மகளிர்

911. அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.

912. பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்.

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

914. பொருட்பொருளார் புன்னலம் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.

915. பொதுநலத்தார் புன்னலம் தோயார் மதிநலத்தின்
மாண்ட அறிவி னவர்.

916. தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

917. நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சின்
பேணிப் புணர்பவர் தோள்.

918. ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

919. வரைவிலா மாணிழையார் மென்தோள் புரைஇலாப்
பூரியர்கள் ஆழும் அளறு.

920. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

**பொருள் :—** வரைவின் மகளிர் – பொதுமகளிர். 911. ஆய்தொடியார் – மகளிர், 912. பயன் தூக்கி – உள்ள பொருளை அளந்தறிந்து. நள்ளாவிடல் – பொருந்தாது விடுக. 913. ஏதில் – முன் அறியாத. தழீ இயற்று–தழுவினாற்போலும். 914. பொருட் பொருளார்–பொருளையே விரும்பும் மகளிர். 915. மதிநலம் – இயற்கையறிவு. 916. பாரிப்பார் – பரப்புவோர் – உயர்ந்தோர். புன்னலம் பாரிப்பார் – பொது மகளிர். 918. அணங்கு – அணங்கு தீண்டுதல், அணங்கு – காம நெறியான் உயிர் கொள்ளும் தெய்வ மகள். 919. வரைவிலா மாணிழையார் – யாவரையும் முயங்கும் மகளிர். புரை – உயர்வு. பூரியர்கள்–கீழ்மக்கள். அளறு – நரகம். 920. கவறு – சூது.

# 93. கள்ளுண்ணாமை

921. உட்கப் படாஅர் ஒளிஇழப்பர் எஞ்ஞான்றும்
கள்காதல் கொண்டொழுகு வார்.

922. உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

923. ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

924. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

925. கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்

926. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

927. உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

928. களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்(து)
ஒளித்ததூஉம் ஆங்கே மிகும்.

929. களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

930. கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.

பொருள் :— 921. உட்கப்படாஅர் – அஞ்சப்படார், ஒளி – புகழ். 923. முகத்தேயும் – முன்பாயினும். 925. மெய்யறியாமை – மெய்ம் மறத்தல், கையறியாமை-செய்வது அறியாமை. 926. துஞ்சினார் – உறங்கினார். 927. உள்ஒற்றி – உள்நிகழ்கின்றது உய்த்துணர்ந்து. கள்ளொற்றி – கள்ளை மறைந்து உண்டு, கண்சாய்பவர் –அறிவுதளர் பவர். 929. காரணம் காட்டுதல் – கள்ளுண்டலாகாது என்று காரணம் காட்டித் தெளிவித்தல், தீத் துரீஇயற்று – விளக்கினால் தேடுவது போலும். 930. உள்ளான் கொல் – நினைக்கமாட்டான் போலும்.

# 94. சூது

931. வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று.

932. ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோ ராறு.

933. உருளாயம் ஓவாது கூறின் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

934. சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்
வறுமை தருவதொன் றில்.

935. கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார்.

936. அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார்.

937. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ
அருள்கெடுத்(து)
அல்லல் உழப்பிக்கும் சூது.

939. உடைசெல்வம் ஊணொளி கல்விஎன் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்.

940. இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற் றுயிர்.

பொருள் :— 931. வென்றதூஉம் – வென்ற பொருள்தானும். பொன்-இரும்பு. 933. உருளாயம்-உருளும் கவறுவிழுந்த எண். ஓவாது-இடைவிடாது. பொருள் ஆயம் – பொருளும் பொருள் வருவாயும், போஒய்–போய், புறமேபடும் – பிறரிடம் செல்லும். 934. சிறுமை-துன்பம். 935. கழகம் – சூது ஆடும்களம், இவறியார் – விடாதவர். 936. அகடுஆரார்-வயிருரப்பெருர். முகடி–மூதேவி. 937. கழகம்–சூதாடு களம். பழகிய – தொன்று தொட்டுவருகிற. 938. மேற்கொளீஇ – மேற் கொள்ளச் செய்து. 939. ஆயம் – சூது. 940. இழத்தொறூஉம் - இழக்குந்தோறும். உழத்தொறூஉம் – அனுபவிக்கும் தோறும், காதற்று உயிர் – காதலையுடைத்து உயிர்.

# 95. மருந்து

941. மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று.

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய(து)
அற்றது போற்றி உணின்.

943. அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

945. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.

946. இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்.

947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

948. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

949. உற்றான் அளவும் பிணிஅளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல்.

950. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்(று)
அப்பாலநாற் கூற்றே மருந்து.

பொருள் :- 941. மிகினும் - (உணவும் செயல்களும்) மிகுமாயினும், வளி... மூன்று — வாதம் பித்தம் சிலேட்டுமம். 942. அருந்தியது — உண்டது. 943. அற்றால் - முன் உண்டது சீரணித்தபிறகு, நெடிது— நெடுங்காலம், உய்க்குமாறு — செலுத்துதற்கு உரிய வழி. 944. மாறல்ல - மாறுகொள்ளாத உணவு, துய்க்க - உண்க, துவர - மிக. 946. இழிவுஅறிந்து - உண்ணலாம் அளவின் சிறிது குறைய உண்பது நன்று என்று அறிந்து, கழிபேரிரையான் - மிக உண்பான். 947. தீ— வயிற்றுப்பசி. 948. முதல் - காரணம், தணிக்கும்வாய் - தீர்க்கும் உபாயம். 949. உற்றான் - நோய்உற்றவன், கற்றான் - மருத்துவன். 950. உழைச்செல்வான் - மருந்தினைத் தப்பாமல் இயற்றுவான்.

# 96. குடிமை

951. இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

952. ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

954. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

955. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று.

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

957. குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

958. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

960. நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

பொருள் :- 951. இற்பிறந்தார் — குடிப்பிறந்தார், செப்பம் — நடுவுநிலைமை. 954. குன்றுவ – ஒழுக்கம் குன்றுவதற்கு ஏதுவாகிய தொழில்கள். 955. வழங்குவது — தாம் கொடுக்கும் பொருள், உள்வீழ்ந்தக் கண்ணும் – சுருங்கியவிடத்தும். 956. சலம் – வஞ்சனை, சால்புஇல — நெறியல்லாத செயல்களை. 957. விசும்பு — வானம், மறு – களங்கம். 958. நாரின்மை – ஈரமின்மை. 959. கிடந்தமை – விதைமறைந்துகிடந்தமை, கால் – முளை.

# 97. மானம்

961. இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.

962. சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

964. தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

965. குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்.

966. புகழின்றால் புத்தேள்நாட் டுய்யாதால் என்மற்(று)
இகழ்வார்பின் சென்று நிலை.

967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
கெட்டான் எனப்படுதல் நன்று.

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

970. இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு.

பொருள் ;- மானம் — என்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வுவந்துழி உயிர்வாழாமையுமாம். 961. குன்றவருப- குடிப்பிறப்புத் தாழவரும் செயல்கள். 962. சீரினும் — புகழ்செய்யு மிடத்தும், பேராண்மை – மானம், 963. பெருக்கத்து — செல்வம் பெருகிய காலத்து, சிறிய சுருக்கத்து — செல்வம் மிகவும் சுருங்கிய காலத்து. 965. குன்றின் அனையார் — குடிப்பிறப்பால் மலைபோல உயர்ந்தோரும், குன்றிஅனைய – குன்றிமணியளவு. 966. புத்தேள் நாடு — தேவருலகம், உய்யாது — செலுத்தாது. 967. ஒட்டார் — இகழ்வார். 968. பெருந்தகைமை – உயர்குடிப்பிறப்பு, பீடு – மானம். 969. அன்னார் – போன்றவர். 970. இளி – இழிவு. ஒளி–புகழ்வடிவு.

# 98. பெருமை

971. ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற்(கு)
அஃதிறந்து வாழ்தும் எனல்.

972. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

973. மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்.

974. ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.

975. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

976. சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.

977. இறப்பே புரிந்த தொழிற்றும் சிறப்பும்தான்
சீரல் லவர்கண் படின்.

978. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

979. பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

980. அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

பொருள் :- 971. உள்ளவெறுக்கை – (செயற்கு அரிய செய்வேம் என்று கருதும்) ஊக்கம்மிகுதி, ஒளி — உளனாயகாலத்து மிக்குத் தோன்றுதலுடைமை. வாழ்தும் — வாழ்வோம். 972. சிறப்பு — பெருமை சிறுமை எனப்பட்ட சிறப்பியல்புகள். 974. ஒருமைமகளிர்— கற்புடையமகளிர், கொண்டு — காத்துக்கொண்டு. 976. நோக்கு — கருத்து. 977. இறப்பே புரிந்த தொழிற்றும் — தருக்கினை மிகச் செய்யும். சீரல்லவர். 979. பெருமிதம்இன்மை — தருக்கின்றி இருத்தல். 980. அற்றம் - பிறருடைய குறை.

# 99. சான்றாண்மை

981. கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

982. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉம் அன்று.

983. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால் பூன்றிய தூண்.

984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

985. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

986. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

987. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

988. இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

989. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்.

990. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

பொருள் :— சான்றாண்மை — எல்லாக் குணங்களும் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை. 981. கடன்என்ப — இயல்பு என்று சொல்லுவர். 982. பிறநலம் — உறுப்புக்களால் ஆயநலன். 984. நலத்தது — அறத்தின்கண்ணது, நோன்மை — தவம், சொல்லா நலத்தது — சொல்லாத குணத்தின் கண்ணது. 985. ஆற்றுவார் — ஒரு காரியத்தைச் செய்து முடிப்பார், மாற்றார் – பகைவர், மாற்றும் – அழிக்கும். 986. கட்டளை — உரைகல், துலையல்லார் கண்ணும் — இழிந்தார் இடத்தும். 989. ஊழி — காலம், ஆழி — கரை; கடல். 990. பொறை — பாரம்.

# 100. பண்புடைமை

991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

993. உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

995. நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

996. பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

998. நண்பாற்றா ராகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்றா ராதல் கடை.

999. நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

பொருள் :– 991. எண்பதத்தால் – காட்சிக்கு எளியராயிருப்பதால். 993. வெறுத்தக்க – செறியத்தக்க, ஒப்பதாம் — பொருந்துவதாகிய. 994. நயன் – நீதி, நன்றி – அறம். புரிந்த – விரும்புதலால். 995. நகை — விளையாட்டு. 998. ஆற்றாராகி — செய்யாது, நயம்இல — பகைமை, கடை – இழுக்குஆம். 999. மாயிருஞாலம் – பெரியஉலகம், இருட்பால் பட்டன்று – இருளின் கண் கிடந்தது.

# 101. நன்றியில் செல்வம்

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

1002. பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்
மருளானாம் மாணாப் பிறப்பு.

1003. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை.

1004. எச்சமென் றென்னெண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.

1005. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினும் இல்.

1006. ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்(று)
ஈதல் இயல்பிலா தான்.

1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.

1008. நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.

1009. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
ஒண்பொருள் கொள்வார் பிறர்.

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

பொருள் :- 1001. வாய்சான்ற – இடம்நிறைந்த. 1002. இவறும்– உலோபம் செய்யும், மருளான் – மயக்கத்தினாலே. 1003. ஈட்டம் இவறி – பொருள் ஈட்டுதலை விரும்பி, இசை – புகழ், தோற்றம் — உடம்பு. 1004. எச்சம் — தனக்குப்பிறகு நிற்பது — புகழ். நச்சப் படாதவன் — விரும்பப்படாதவன். 1006. ஏதம் — நோய். 1007. அற்றார்க்கு – பொருள் இல்லாதார்க்கு, ஆற்றாதான் – கொடாதானது, தமியள்மூத்தற்று — தன்னைப்பிறர்க்கு ஈவார் இன்றித் தமியளாகி முதிர்ந்தாற் போலும். 1009. ஓரீஇ — ஒழித்து, தற்செற்று — தன்னைக் காத்தலும் இன்றி. 1010. துனி – வறுமை, மாரி – மேகம், வறங்கூர்ந்தனையது – மழை பெய்யாதது போலும்.

# 102. நாணுடைமை

1011. கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

1012. ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

1013. ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்
நன்மை குறித்தது சால்பு.

1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேல்
பிணியன்றோ பீடு நடை.

1015. பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்(கு)
உறைபதி என்னும் உலகு.

1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

1017. நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்.

1018. பிறர்நாணத் தக்கது நாணா னாயின்
அறநாணத் தக்க துடைத்து.

1019. குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

1020. நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி யற்று.

பொருள் :— 1011. நாணு — நாணம். திருநுதல் நல்லவர் — குலமகளிர். 1012. எச்சம் – உறக்கம் முதலியன. வேறல்ல–பொது. 1013. ஊனைக்குறித்த — உடம்பினை நிலைக்களனாகக்கொண்டுள்ளன. 1014. பீடுநடை – பெருமிதத்தையுடைய நடை. 1015. உறைபதி – உறைவிடம். 1016. வியன்ஞாலம் — பெரிய உலகம், பேணலர் — கொள்ளவிரும்பார், மேலாயவர் — உயர்ந்தவர். 1017. நாணால் — நாண்சிதையாமைப் பொருட்டு. 1018. நாணத்தக்கது — நாணி அடையாது ஒழியும் தகுதி. 1019. கொள்கை – ஒழுக்கம், சுடும் – கெடுக்கும். 1020. நாணால் — கயிற்றினால், உயிர்மருட்டியற்று — உயிர்உள்ளதுபோல மயக்குவதை ஒக்கும்.

# 103. குடிசெயல் வகை

1021. கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்.

1022. ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி.

1023. குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

1024. சூழாமல் தானே முடிவெய்தும் தன்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

1025. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

1026. நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

1028. குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

1029. இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

1030 இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

பொருள் :- *1021.* கைதூவேன் — விடேன், பீடு — பெருமை. *1022.* ஆள்வினை–முயற்சி, ஆன்ற-நிறைந்த, நீளும்–உயரும். *1023.* குடிசெய்வல் — குடியை உயரச்செய்வேன், மடிதற்று — ஆடையை இறுக உடுத்திக்கொண்டு, முந்துறும் — முற்பட்டு நிற்கும். *1024.* தாழாது — விரைந்து, உஞற்றுபவர்க்கு — முயல்பவர்க்கு. *1027.* அமரகத்து – போர்க்களத்து, வன்கண்ணர் – சேனைத்தலைவர். *1029.* குற்றம் மறைப்பான் — துன்பம்வராமல் காப்பவன், இடும்பை — துன்பம். *1030.* இடுக்கண் – துன்பம், அடுத்து ஊன்றும் நல்லாள்– தாங்கவல்ல நல்ல ஆண் மகன்.

# 104. உழவு

1031. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

1032. உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து.

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

1034. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர்.

1035. இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

1036. உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

1037. தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

1038. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

1039. செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்(து)
இல்லாளின் ஊடி விடும்.

1040. இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

பொருள் :— 1031. சுழன்றும் — பிறதொழில்களைச் செய்து திரிந்தும், உழந்தும் – வருந்தியும். 1032. அஃதுஆற்றாது — உழவுத் தொழிலைச் செய்யாது, எழுவாரை — செல்வாரை, பொறுத்து — தாங்குதலால். 1032. அலகுடை நீழலவர் — நெல்லினையுடையராய தண்ணளியுடையோர். 1035. இரவார்–யாசிக்கமாட்டார், கைசெய்து– உழுது, ஊண்மாலையவர் – உண்பதை இயல்பாக உடையவர். 1036. மடங்கின் – செய்யாது ஒழியின், விழைவதூஉம் – யாவரும் விரும்பும் உணவும். 1037. தொடி – பலம், கஃசு – கால்பலம், உணக்கின் – காயவைத்தால், 1038. கட்டபின் – களைஎடுத்தால். 1039. கிழவன்– நிலத்துக்குரியவன், இல்லாளின் – மனைவிபோல. 1040. அசைஇ— சோம்பி.

# 105. நல்குரவு

1041. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

1042. இன்மை எனஒரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

1043. தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை.

1044. இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

1045. நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

1046. நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

1047. அறஞ்சார நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

1049. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

பொருள் :— நல்குரவு – வறுமை. 1041. இன்மையின் – வறுமையைப்போல, இன்னாதது – துன்பஞ்செய்வது. 1043. தொல்வரவு – தொன்று தொட்டு வருகின்ற குடிப்பிறப்பு, தோல் – விழுமியசொல். 1044. இளிவந்த–இழிவு வருவதற்கு ஏதுவாகிய. 1046. சோர்வுபடும்– பயன் படாது. 1048. நெருநல் – நேற்று, நிரப்பு – வறுமை. 1049. கண்பாடு – உறக்கம். 1050. துப்புரவு – நுகரப்படும் பொருள், துவர– முழுவதும்.

# 106. இரவு

1051. இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.

1052. இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
துன்பம் உறாஅ வரின்.

1053. கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்(று)
இரப்புமோர் ஏஎர் உடைத்து.

1054. இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு.

1055. கரப்பிலார் வையகத் துண்மையான் கண்ணின்(று)
இரப்பவர் மேற்கொள் வது.

1056. கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

1058. இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

1059. ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை.

1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

பொருள் :- 1051. இரத்தக்கார் – இரக்கத்தக்கார் – கொடையாளி. 1052. உறாஅ – உறுமல். 1053. ஏஎர் – ஏர் – அழகு. 1054. தேற்றாதார்மாட்டு – அறியாதாரிடத்து. 1055. கரப்புஇலார் – இல்லை என்று சொல்லாது கொடுப்பவர், கண்ணின்று — முன்னின்று. 1059. தோற்றம் – புகழ், கோள் – கொள்ளுதல், மேவார் – விரும்புபவர், இலாஅக்கடை – இல்லாத இடத்து.

# 107. இரவச்சம்

1061. கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

1062. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

1063. இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

1064. இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

1065. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த(து)
உண்ணலின் ஊங்கினிய தில்.

1066. ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்(கு)
இரவின் இளிவந்த தில்.

1067. இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

1068. இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

1069. இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூம் இன்றிக் கெடும்.

1070. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

பொருள் :- 1062. உலகு இயற்றியான்-உலகத்தைப்படைத்தவன். 1063. வன்பாட்டதுஇல் — வலிமைப்பாடுடையது இல்லை. 1064. இடம் — உலகம், கொள்ளாத்தகைத்து — கொள்ளாத பெருமை யுடைத்து. இடம் - நுகர்ச்சிப்பொருள்கள், ஒல்லா – உடன்படாத. 1065. தெண்ணீர் – தெளிந்தநீர், அடுபுற்கை - சமைக்கப்பெற்ற கூழ். தாள் – முயற்சி. 1068. ஏமாப்புஇல் – காவலற்ற, பார் – வன்னிலம், பக்குவிடும் — பிளக்கும். 1069. இரவுஉள்ள — இரந்து நிற்றலின் கொடுமையை நினைத்தால், கெடும்–(உயிர்)கெடும். 1070. சொல்லாட- இல்லை என்று சொன்ன அளவில், போஒும் - போகும்.

# 108. கயமை

1071. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்.

1072. நன்றறி வாரின் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர்.

1073. தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

1074. அகப்பட்டி யாவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.

1075. அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது.

1076. அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்கும்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.

1079. உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.

1080 எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

**பொருள் :—** 1071. ஒப்பாரி — ஒப்பு. 1072. திரு — நன்மை, அவலம் — கவலை. 1073. மேவன — விரும்புவனவற்றை. 1074. அகப்பட்டி – மிகப்பட்டு – மேம்பட்டு, செம்மாக்கும் – இறுமாக்கும், கீழ் – கயவர். 1075. ஆசாரம்-ஒழுக்கம், எச்சம்-(அச்சம்) ஒழிந்தால், அவா — பொருள்மேல் ஆசை, உண்டாம் — ஒழுக்கம் உண்டாம். 1076. மறை – இரகசியம். 1077. ஈர்ங்கை – கழுவினகை, கொடிறு– கூன்கை — முறுக்கியகை. 1079. வற்றாகும் — வல்லனும். 1080. எற்றிற்கு – வேறு எத்தொழிற்கு.

**பொருட்பால் முற்றும்**

# காமத்துப்பால்

## களவியல்

## 109. தகை அணங்கு உறுத்தல்

1081. அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலும்என் நெஞ்சு.

1082. நோக்கினாள் நோக்குஎதிர் நோக்குதல் தாக்குஅணங்கு
தானைக்கொண் டன்னது உடைத்து.

1083. பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனிஅறிந்தேன்
பெண்தகையால் பேர்அமர்க் கட்டு.

1084. கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தான் [பெண்தகைப்
பேதைக்கு அமர்த்தன கண்.

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம்இம் மூன்றும் உடைத்து.

1086. கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்குஅஞர்
செய்யல இவள் கண்.

1087. கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.

1088. ஒள்நுதற்கு ஓஓ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்கும்என் பீடு.

1089. பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு
அணிஎவனோ ஏதில தந்து.

1090. உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று.

பொருள் :— தகையணங்குறுத்தல் – அவள் வனப்புத் தன்னை வருத்த முறுவித்ததைச் சொல்லுதல். 1081. அணங்கு கொல்–தெய்வ மகளோ. மாலும்–மயக்கும். 1082. நோக்கினாள்–இத்தகைய வனப்பு உடையாள். தாக்கணங்கு – தாக்கிவருத்துவதோர் அணங்கு. தானை–சேனை. 1083. பேர் அமர்க் கட்டு – பெரியவாய் அமர்த்த கண்களை யுடைத்து. 1084. அமர்த்தன–மாறுபாடு கொண்டன. 1086. கோடா மறைப்பின் – செப்பமுடையவாய் விலக்கினவாயின். 1087. கடாக் களிறு – மதயானை. 1088. ஞாட்பு – போர்க்களம். நண்ணார்–பகைவர். உட்கும் – அஞ்சும், பீடு – வலி. 1089. ஏர் – ஒத்த, ஏதில – வேற்றுமையுடைய அணிகள். தந்து-படைத்து. அணி எவன்-அணிதல் என்னபயனுடைத்து.

# 110. குறிப்பு அறிதல்

1091. இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன் று அந்நோய் மருந்து.

1092. கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன் று பெரிது.

1093. நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதுஅவள்
யாப்பினுள் அட்டிய நீர்.

1094. யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்.

1095. குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

1096. உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்
ஒல்லை உணரப் படும்.

1097. செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்
உறாஅர்போன் று உற்றார் குறிப்பு.

1098. அசைஇயற்கு உண்டுஆண்டுஓர் ஏர்யான் நோக்கப்
பசையினள் பைய நகும்.

1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.

1100. கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

**பொருள் :—** 1092. களவு கொள்ளும்– யான் காணாமல் என்மேல் நோக்குகின்ற. செம்பாகம் – சரிபாதி. 1093. யாப்பினுள்–தோன்றிய அன்பு ஆகிய பயிர் வளர. அட்டிய–வார்த்த. 1095. சிறக்கணித்தாள்–சுருங்கினாள். 1096. செறார் சொல் – அருளுடையார் சொல். ஒல்லை – விரைவில். 1098. அசையியற்கு – நுடங்கிய இயல்பினையுடையாட்கு. ஆண்டு – அந்நகையின் கண். ஓரேர் – ஒரு நன்மை. பசையினள் – நெகிழ்ந்து. பைய – மெல்ல.

# 111. புணர்ச்சி மகிழ்தல்

1101. *கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்*
*ஒள்தொடி கண்ணே உள.*

1102. *பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை*
*தன்நோய்க்குத் தானே மருந்து.*

1103. *தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு.*

1104. *நீங்கின் தெறாஉம் குறுகுங்கால் தண்என்னும்*
*தீயாண்டுப் பெற்றாள் இவள்.*

1105. *வேட்ட பொழுதின் அவையவை போலுமே*
*தோடுஆர் கதுப்பினாள் தோள்.*

1106. *உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு*
*அமிழ்தின் இயன்றன தோள்.*

1107. *தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்*
*அம்மா அரிவை முயக்கு.*

1108. *வீழும் இருவர்க்கு இனிதே வளிஇடை*
*போழப் படாஅ முயக்கு.*

1109. *ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்*
*கூடியார் பெற்ற பயன்.*

1110. *அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்*
*செறிதோறும் சேயிழை மாட்டு.*

பொருள் :— *1101. உயிர்த்து – மூக்கான் மோந்து. உற்று – மெய்யால் தீண்டி. 1103. வீழ்வார்-விரும்பும் மகளிர், துயிலின்-துயில் போல. தாமரைக் கண்ணான் – திருமாலுலகம். 1104. தெறாஉம்– சுடும். 1105. வேட்டபொழுது – விரும்பிய பொழுதில், தோட்டார் கதுப்பினாள் – பூவினையணிந்த கூந்தலையுடையாள். 1106. இயன்றன– செய்யப்பெற்றன. 1107. பாத்து – பகுத்து. உண்டற்று – உண்டாற் போலும். 1108. வீழும்–விரும்பும், வளி – காற்று. 1110. அறிதோறு- அறிய அறிய, அறியாமை – முன்னை அறியாமை.*

# 112. நலம்புனைந்து உரைத்தல்

1111. நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

1113. முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்தோள் அவட்கு.

1114. காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று

1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.

1116. மதியும் மடந்தை முகனும் அறியா
பதியின் கலங்கிய மீன்.

1117. அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

1118. மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி.

1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.

1120. அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.

**பொருள்** :— **1111.** நன்னீரை – நல்ல இயற்கையை யுடையை, யாம் வீழ்பவள் – எம்மால் விரும்பப்பட்டவள். **1112.** மையாத்தி – மயங்குகின்றாய். **1113.** முறி – தளிர். முத்தம் – முத்து. முறுவல் – பல். நாற்றம் – வாசனை, வெறி – நறுமணம். **1115.** நுசுப்பு – இடை. படாஅ – ஒலியா. **1116.** பதியின் – தம் நிலையினின்றும். **1117.** அறுவாய் – முன் குறைந்தகலை. அவிர் – விளங்கும். **1118.** காதலை – காதலையுடையை. **1119.** தோன்றல் – தோன்றாதே. **1120.** தூவி – சிறகு.

# 113. காதற் சிறப்புரைத்தல்

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வால்எயிறு ஊறிய நீர்.

1122. உடம்பொ டுயிரிடை யென்னமற்று அன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம்.

1124. வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கும் இடத்து.

1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.

1126. கண்உள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்
நுண்ணியர்எம் காத லவர்.

1127. கண்ணுள்ளார் காதல் அவராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து.

1128. நெஞ்சத்தார் காதல் அவராக வெய்துஉண்டல்
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து.

1129. இமைப்பிற் கரப்பாக்கு அறிவல் அனைத்திற்கே
ஏதிலர் என்னும்இவ் வூர்.

1130. உவந்துறைவர் உள்ளத்துள் என்றும்
ஏதிலர் என்னும்இவ் வூர். [இகந்துறைவர்

பொருள் :— 1121. பணிமொழி – மெல்லிய மொழியினையுடையாள், வாலெயிறு – வெண்மையான பல். 1123. போதாய்-போவாய். வீழும் – விரும்பப்பட்ட. 1124. ஆயிழை – தெரிந்த இழையினையுடையாள். 1126. கண்ணுள்ளில் - கண்ணகத்திலின்று, பருவரார் - வருந்தமாட்டார். 1127. கண்ணும் எழுதேம் – கண்ணினை அஞ்சனத்தால் எழுதேம். கரப்பாக்கு-(அத்துணைக் காலமும் அவர்) மறைதலை. 1128. வெய்துண்டல் – (உண்ணுங்கால்) வெம்மையுள்ளதாக உட்கொள்ளுதல். வேபாக்கு-வெப்பத்தை யடைதல். 1129. கரப்பாக்கு அறிவல் – (காதலர்) மறைதலையறிந்து இமையேன். அனைத்திற்கே – அவ்வளவிற்கே, ஏதிலர் – அன்பிலர். 1130. இகந்துறைவர் – பிரிந்துறைவர்.

# 114. நாணுத்துறவுரைத்தல்

1131. காமம் உழந்து வருந்ினார்க்கு ஏம
மடல்அல்லது இல்லை வலி.

1132. நோனா உடம்பும் உயிரும் மடல்ஏறும்
நாணினை நீக்கி நிறுத்து.

1133. நாணொடு நல்லாண்மை பண்டுஉடையேன்
காமுற்றார் ஏறும் மடல். [இன்றுடையேன்

1134. காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு
மாலை உழக்கும் துயர்.

1136. மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படல்ஒல்லா பேதைக்குஎன் கண்.

1137. கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்
பெண்ணிற் பெருந்தக்கது இல்.

1138. நிறைஅரியர் மன்அளியர் என்னாது காமம்
மறைஇறந்து மன்று படும்.

1139. அறிகிலார் எல்லாரும் என்றேஎன் காமம்
மறுகில் மறுகும் மருண்டு.

1140. யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.

**பொருள் :-** நாணுத் துறவுரைத்தல்–நாண்விட்டமை தோன்றும் பேச்சுக்களைப் பேசுதல். 1131. உழந்து – அனுபவித்து. ஏமம் – துன்பத்தைப் போக்கி இன்பத்தைக் கொடுப்பது. 1132. நோனா – வருத்தத்தினைப் பொறுத. நீக்கி நிறுத்து–அகற்றி. 1134. உய்க்குமே– (என்னிற் பிரித்துக்)கொண்டு போயிற்று. 1135. தொடலைக்குறுந் தொடி – மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாள். 1136. படல்ஒல்லா – தூங்குதலைப் பொருந்தா. 1137. பெருந்தக்கது இல் – மிக்க தகுதியினையுடைய பிறப்பு உலகத்து இல்லை. 1138. நிறை – மனவடக்கம். மன் அளியர் – மிகவும் அளிக்கத்தக்கார். மறைஇறந்து - மறைத்தலைக் கடந்து. மன்றுபடும் — மன்றில் வெளிப்படுவதாயிருந்தது. 1139. மறுகில் – தெருவில். மருண்டு மறுகும் – மயங்கிச் சுழலும். 1140. யாம்பட்ட – யாமுற்ற நோய்கள். தாம்படாவாறு – தாம் உறாமையின்.

# 115. அலர் அறிவுறுத்தல்

1141. அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலர்அறியார் பாக்கியத் தால்.

1142. மலர்அன்ன கண்ணாள் அருமை அறியாது
அலர்எமக்கு ஈந்ததுஇவ் வூர்.

1143. உறாஅதோ ஊர்அறிந்த கௌவை அதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

1144. கவ்வையால் கவ்விது காமம் அதுஇன்றேல்
தவ்வென்னும் தன்மை இழந்து.

1145. களித்தொறும் கள்உண்டல் வேட்டற்றால் காமம்
வெளிப்படும் தோறும் இனிது.

1146. கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று.

1147. ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளும்இந் நோய்.

1148. நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்
காமம் நுதுப்பேம் எனல்.

1149. அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை.

1150. தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்
கௌவை எடுக்கும்இவ் வூர்.

பொருள் :— 1141. பாக்கியத்தால் – தெய்வத்தால். 1143. கௌவை – அலர். அதனை – அக்கூட்டத்தை. 1144. கவ்விது – மேன் மேல்மிக்கது. தன்மை – தன்னியல்பு. தவ்வென்னும் – சுருங்கும். 1145. களித்தொறும் – களிக்குந்தொறும். வேட்டற்று–இனிதாமாறு போல. 1146. திங்கள் – சந்திரன். 1147. நீளும் – வளரும். நோய்– காமநோயாகிய பயிர். 1148. எரிநுதுப்பேம் – நெருப்பை அவிப் போம். 1149. அஞ்சல் ஓம்பு – பயப்படுதலை நீக்கு. நீத்தக்கடை – நீத்தபிறகு. 1150. வேண்டும் – விரும்புகின்ற.

## 2. கற்பியல்

# 116. பிரிவு ஆற்றாமை

1151. செல்லாமை உண்டேல் எனக்குஉரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்கு உரை.

1152. இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவுஅஞ்சும்
புன்கண் உடைத்துஆல் புணர்வு.

1153. அரிதுஅரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவுஓர் இடத்துண்மை யான்.

1154. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க்கு உண்டோ தவறு.

1155. ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கின் அரிதால் புணர்வு.

1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயின் அரிதவர்
நல்குவர் என்னும் நசை.

1157. துறைவன் துறந்தமை தூற்றுகொல் முன்கை
இறைஇறவா நின்ற வளை.

1158. இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு.

1159. தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.

1160. அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.

பொருள் :— 1151 வல்வரவு-விரைந்து வருதல். 1152. பார்வல்-நோக்கு. இன்கண்உடைத்து-இன்பம் உடைத்தாயிருக்கும். புன்கண்-அச்சம். 1154. தேறியார்க்கு – மெய்யெனத் தெளிந்தார்க்கு. 1155. ஓம்பின்–காப்பாயாயின். ஓம்பல்-விலக்குவாயாக. 1156. வன்கண்ணர்-கொடுமையுடையவராயின. நசை-ஆசை. 1157. துறந்தமை–பிரிந்தமை இறவாநின்ற – கழலுகின்ற. தூற்றுகொல்-அறிவியாவோ? 1158. இனன்இல் – தோழியர் இல்லாத. இனியார் – காதலர்.

# 117. படர்மெலிந்து இரங்கல்

1161. மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை
இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல மிகும்.

1162. கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்கு
உரைத்தலும் நாணுத் தரும்.

1163. காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்
நோனா உடம்பின் அகத்து.

1164. காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமப் புணைமன்னும் இல்.

1165. துப்பின் எவன்ஆவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர்.

1166. இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்
துன்பம் அதனிற் பெரிது.

1167. காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

1168. மன்உயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா
என்னல்லது இல்லை துணை.

1169. கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்
நெடிய கழியும் இரா.

1170. உள்ளம்போன்று உள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீந்தல மன்னோஎன் கண்.

**பொருள் :—** படர் - துன்பம். 1162. கரத்தலும் - மறைத்தலும் 1163. காவா - காவடித்தண்டாகக்கொண்டு. 1164. ஏமம் - அரண் 1165. துப்பின் - பகைமைக்கண். ஆற்றுபவர்-செய்யவல்லவர். 1166. அடுங்கால்-பிரிவால் துன்பஞ் செய்யுங்கால். 1167. கடும்புனல்-கடல். 1168. அளித்து - இரங்கத்தக்கது. துயிற்றி-துயிலப் பண்ணுதலான். இரா-இரவு. 1169. இந்நாள்-காதலரைப் பிரிந்த இந்நாள். கொடியார்-கணவர். 1170. உள்வழி - (காதலர்) உள்ளவிடத்து. செல்கிற்பின்-(விரைவில்) செல்ல வல்லனவாயின். நீந்தல - நீந்தா.

# 118. கண்விதுப் பழிதல்

1171. கண்தாம் கலுழ்வது எவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம் கண்டது.

1172. தெரிந்துஉணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்.

1173. கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்கது உடைத்து.

1174. பெயல்ஆற்றா நீர்உலந்த உண்கண் உயலாற்றா
உய்வில்நோய் என்கண் நிறுத்து.

1175. படல்ஆற்றா பைதல் உழக்கும் கடல்ஆற்றாக்
காமநோய் செய்தஎன் கண்.

1176. ஓஒ இனிதே எமக்கிந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

1177. உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.

1178. பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றுஅவர்க்
காணாது அமைவில கண்.

1179. வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

1180. மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால் எம்போல்
அறைபறை கண்ணார் அகத்து.

பொருள் :— கண் விதுப்பு அழிதல்–கண்கள் கணவனைக் காண்பதற்கு விரைதலினால் வருந்துதல். 1171. கலுழ்வது – அழுகின்றது. எவன்கொல்–என்கருதி. தண்டா–தணியா. தாம்காட்ட - அக்கண்கள் தாம் (எமக்குக் காதலரைக்) காட்டலானன்றோ. 1172. பரிந்துணரா–கூறுபடுத்துணராது. பைதல் உழப்பது–வருத்தம் அனுபவிப்பது. 1173. கதுமென - விரைந்து. நகத்தக்க துடைத்து – சிரிக்கத்தக்க இயல்பினையுடையது. 1174. உலந்த – வற்றிவிட்டன. உயல்–உய்தல் உய்வில்—ஒழிவில்லாத. 1175. கடல் ஆற்றா — கடலும் சிறிதாம் வண்ணம் பெரிதாய, படல் ஆற்றா – துயிலாமல். பைதல் - துன்பம். 1176. கண்டாஅம் கண்தாம். இதன்பட்டது–இத்துயிலா தழுதற் கண்ணே பட்டது. 1177. இழைந்து - உள் நெகிழ்ந்து. வேண்டி – விடாதே. 1178. பேணாது–விரும்பாதிருந்து. பெட்டார்–விரும்பியவர். 1179. ஆயிடை–அவ்விருவழியும். ஆரஞர்–பொறுத்தற்கரிய துன்பம். 1180. பெறல்–அறிதல்.

# 119. பசப்புறு பருவரல்

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்புயார்க்கு உரைக்கோ பிற.

1182. அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்
மேனிமேல் ஊரும் பசப்பு.

1183. சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

1184. உள்ளுவன் மன்யான் உரைப்பது அவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.

1185. உவக்காண்எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்பூர் வது.

1186. விளக்கு அற்றம் பார்க்கும் இருளேபோல் [கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

1188. பசந்தாள் இவளென்பது அல்லால் இவளைத்
துறந்தார் அவரென்பார் இல்.

1189. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

1190. பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

**பொருள் :—** பசப்புறுபருவரல் — பசப்பு உறுதலான் ஆய வருத்தம். பசப்பு – பிரிவாற்றாமையான் வருவதோர் நிறவேறுபாடு. 1181. நல்காமை நேர்ந்தேன் - பிரிவையுடம்பட்ட நான். உரைக்கோ– சொல்வேன். 1182. தகையால்–பெருமிதத்தால். 1183. சாயல்-மேனி யழகு. 1185. இவக்காண்-இங்கேயன்றோ. 1186. அற்றம் பார்க்கும் - சோர்வு பார்த்து நெருங்கிவரும். கொண்கன்—தலைவன். 1187. அள்ளிக்கொள்வற்று – அள்ளிக்கொள்வதுபோல வந்து செறிந்தது.

# 120. தனிப்படர் மிகுதி

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி.
1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.
1193. வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.
1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.
1195. நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை.
1196. ஒருதலையான் இன்னாது காமங்காப் போல
இருதலை யானும் இனிது.
1197. பருவரலும் பைதலும் காணான்கொல் காம(ன்)
ஒருவர்கண் நின்றொழுகு வான்.
1198. வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.
1199. நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.
1200. உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

பொருள் :— தனிப்படர் மிகுதி - பிரிவுத்துயர்மிகுதி தலைவன்கண் இன்றித் தலைவியின் இடத்தே ஆதல் கூறுவது. 1191. தாம் வீழ்வார்-தம்மாற் காதலிக்கப்படும் கணவரை. வீழப்பெற்றவர் – காதலிக்கப் பெற்ற மகளிர். காமத்து – காமநுகர்ச்சி என்னும், காழ்இல் – பரல் இல்லாத. 1192. பயந்தற்று – அளவறிந்து பெய்தாற்போலும். வீழ்வார்க்கு – மகளிர்க்கு. வீழ்வார்–கணவர். 1193. வீழுநர் வீழப்படுவார்க்கு-கணவரான் விரும்பப்படும் மகளிர்க்கு. வாழுநம்-வாழ்வோம். 1194. கெழீஇயிலர்–நல்வினை இல்லாதவர். 1197. பருவரல்-பசப்பானுயவருத்தம். பைதல் - பிரிவுத்துயர் மிகுதி. 1198. வாழ்வாரின் – (பிரிவாற்றி) வாழ்கின்ற மகளிர்போல. வன்கணாரில் - கொடுமையுடையார் இல்லை. 1199. நசைஇயார் - என்னால் விரும்பப்பட்ட தலைவர். இசை-சொல். 1200. உறுநோய் - மிக்கநோய். செறாஅ அய்-செறாய் - தூர்க்க முயல்வாயாக.

# 121. நினைந்தவர் புலம்பல்

1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காமம் இனிது.

1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.

1203. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

1204. யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ உளரே யவர்.

1205. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எந்நெஞ்சத் தோவா வரல்.

1206. மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடியான்
உற்றநா ளுள்ள உளேன்.

1207. மறப்பின் எவனாவன் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

1208. எனைத்து நினைப்பினுங் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு.

1209. விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை யாற்ற நினைந்து.

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.

**பொருள் :-** நினைந்து—முன் கூடியபொழுது பெற்ற இன்பத்தை நினைந்து; அவர் – தலைமகளும் தலைமகனும். **1201.** மகிழ் – மகிழ்ச்சி. **1203.** சினைப்பது - வருவது. **1205.** கடிகொண்டார்–காவல்கொண்ட காதலர், ஓவாவரல்–ஒழியாது வருதல். **1206.** உற்றநாள்–புணர்ந்த நாள் தோன்றிய இன்பத்தை, உள்ள உளேன் – நினைப்பதால் உயிர் வாழ்கின்றேன், என்உளேன் — வேறு எத்தால் உயிர் வாழ்வேன்? **1207.** எவன்ஆவன் — உயிர் வாழ்வது எதனால். **1208.** காயார் — வெகுளார், சிறப்பு—இன்பம். **1209.** அளி–கருணை, ஆற்ற–மிகவும்.

# 122. கனவு நிலையுரைத்தல்

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.

1213. நனவினால் நல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் உயிர்.

1214. கனவினான் உண்டாகுங் காமம் நனவினான்
நல்காரை நாடித் தரற்கு.

1215. நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

1216. நனவென ஒன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்.

1217. நனவினான் நல்காக் கொடியார் கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது.

1218. துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்த ராவர் விரைந்து.

1219. நனவினான் நல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்.

1220, நனவினான் நந்நீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொல் இவ்வூ ரவர்.

**பொருள் :–** 1212. உயல்உண்மை–ஆற்றியுளேன் ஆகிய தன்மை, சாற்றுவேன் – சொல்வேன். 1213. காண்டலின்–கண்டகாட்சியானே. 1214. தரற்கு – தருதலான், காமம் – இன்பம். 1216. நீங்கலர் — பிரியார். 1217. பிழிப்பது — வருத்துவது.

# 123. பொழுதுகண்டிரங்கல்

1221. மாலையோ அல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

1222. புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை.

1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.

1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.

1225. காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

1226. மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த திலேன்.

1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

1228. அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலுங் கொல்லும் படை.

1229. பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

1230. பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயுமென் மாயா உயிர்.

பொருள் :– 1221. வேலை – இறுதிக்காலம். 1222. புன்கண்ணை – ஒளியிழத்தலையுடையாய். மருள் – மயங்கிய – பகலும் இரவும் கலந்த. கேள் — துணைவன் கண்ணதோ — கொடுமையுடையதோ? 1223. பனி அரும்பி — நடுக்கமெய்தி, பைதல்கொள் — பசந்துவந்த, துனி அரும்பி — இறந்துபாடு வந்துதோன்றி. 1224. ஏதிலர்–கொலைஞர். 1225. எவன் – யாது. 1226. மணந்தார் – காதலர். அகலாத காலை– பிரிவதற்கு முன். 1227. போது – பேரரும்பு. 1229. பதி – இவ்வூரிலுள்ளார், மருண்டு — மயங்கி, பைதல் உழக்கும் — நோயை அனுபவிக்கும், படர்தரும்போழ்து – வரும்பொழுது. 1230. பொருள் மாலையாளரை – பொருளையீட்ட முயலும் இயல்பே தமக்கு இயல்பாக உடையவரை, உள்ளி – நினைந்து, மருள்மாலை — மயங்கும் மாலைக் கண்ணே, மாயா – இறந்துபடாதிருந்த.

# 124. உறுப்புநலனழிதல்

1231. சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

1233. தணந்தமை சால அறிவிப்ப போலும்
மணந்தநாள் வீங்கிய தோள்.

1234. பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

1235. கொடியார் கொடுமை உரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.

1236. தொடியொடு தோள்நெகிழ நோவ லவரைக்
கொடிய ரெனக்கூறல் நொந்து.

1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோள் பூச லுரைத்து.

1238. முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

1239. முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

1240 கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

பொருள் :— 1231. சிறுமை — ஆற்றாமை. சேட் சென்றார் — சேணிடைச் சென்ற காதலரை. 1232. நல்காமை - அருள் செய்யாமையை. 1233. தணந்தமை — பிரிந்தமையை, வீங்கிய — பூரித்த. 1234. பணை — பெருமை, பைந்தொடிசோரும் — வளைகழலும், தொல்கவின் — பழைய இயற்கையழகு. 1236. நெகிழ — மெலிய, நொந்து - பொறுது, நோவல் - நோவேன். 1237. பாடுபெறுதியோ— மேம்பாடு எய்த வல்லையோ, பூசல் — ஆரவாரம். 1238. ஊக்க — நெகிழவிட, நுதல் - நெற்றி. 1239. தண்வளி - சிறுகாற்று, போழ— நுழைய. 1240. பருவரல் எய்தின்று - துன்பமுற்றது.

# 125. நெஞ்சொடுகிளத்தல்

1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்
[தொன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

1242. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் நெஞ்சு.

1243. இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்
பைதல்நோய் செய்தார்க ணில்.

1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்
தின்னும் அவர்க்காண லுற்று.

1245. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்
உற்றால் உறாஅ தவர்.

1246. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சு.

1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.

1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் நெஞ்சு.

1249. உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ
யாருழைச் சேறியென் நெஞ்சு.

1250. துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னும் இழத்துங் கவின்.

பொருள் :- 1241. எவ்வநோய் – ஒன்றாலும் தீராதநோய். 1243. என்பரிதல் — வருந்துகின்றது ஏன்? பைதல் — துன்பம், பரிந்து உள்ளல்இல் — இரங்கி வரக்கருதுதல் உண்டாகாது. 1244. கொளச்சேறி – உடன்கொண்டு செல்வாயாக, அவர்க்காண லுற்று – அவரைக் காணவேண்டி, தின்னும் — தின்பனபோன்று வருத்தும். 1245. செற்றார் – வெறுத்தார், உற்றால் — அன்புற்றிருக்க. 1246. கலந்து உணர்த்தும் — கலவியால் நீக்கவல்ல, உணராய் — நீங்க மாட்டாய், பொய்க்காய்வுகாய்தி — பொய்யாக புலக்கின்றாய். 1248. நல்கார் — அருள் செய்யார். 1249. யாருழைச்சேறி — யாரிடத்தில் செல்கின்றாய்? 1250. துன்னா-கூடாதவாறு, கவின்-அழகு, இழத்தும்-இழப்போம்.

# 126. நிறையழிதல்

1251. காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

1252. காமமென ஒன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளுந் தொழில்.

1253. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

1254. நிறையுடையேன் என்பேன்மன் யானோஎன் காமம்
மறையிறந்து மன்று படும்.

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவதொன் றன்று.

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ
வெற்றென்னை உற்ற துயர்.

1257. நாணென ஒன்றோ அறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்றோநம்
பெண்மை யுடைக்கும் படை.

1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

பொருள் :- நிறையழிதல் – தலைமகள் தன்மனத்தடக்கற்பாலன வற்றை காதல் மிகுதியால் அடக்கமாட்டாது கூறுதல். 1251. கணிச்சி – குந்தாலி, நாணுத்தாழ்வீழ்த்த – நாணுகிய தாழ்ப்பாளைக் கோத்த. 1252. கண்ணின்று — கண்ணோட்டம் இல்லாததாயிற்று, தொழில் ஆளும் — தலைமகனிடத்துச் செல்லுதல் ஆகிய தொழிலின் கண்ணே செலுத்தும். 1253. குறிப்பின்றி – என் கருத்தின்வாராது. 1254. மறை இறந்து — மறைத்தலைக் கடந்து, மன்றுபடும் — பலருமறிய வெளிப்படும். 1255. செற்றார் — அகன்று சென்றார். 1256. அளித்து — சாலநன்று, எற்று — எத்தன்மையது? 1257. அறியலம் – அறியமாட்டேம், பேணியார்–நம்மால் விரும்பப்பட்டவர், பெட்பச்செயின் — விரும்பியவற்றைச் செய்யுமளவில். 1258. பெண்மை – நிறை.

# 127. அவர்வயின்விதும்பல்

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

1262. இலங்கிழாய் இன்று மறப்பினென் றோள்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.

1263. உரன்நசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னு முளேன்.

1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் நெஞ்சு.

1265. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்
நீங்குமென் மென்றோட் பசப்பு.

1266. வருகமற் கொண்கன் ஒருநாட் பருகுவன்
பைதல்நோ யெல்லாங் கெட.

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ [கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

1269. ஒருநாள் எழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

1270. பெறினென்னும் பெற்றக்கா லென்னும் [உறினென்னும்
உள்ள முடைந்துக்கக் கால்.

பொருள் :— அவர்வயின் விதும்பல் — தலைமகனும் தலைமகளும் வேட்கை மிகுதியால் ஒருவரை யொருவர் காண்டற்கு விரைதல். 1261. வாள்அற்று — ஒளியிழந்து. புற்கென்ற — பொலிவற்றன. ஒற்றி – தொட்டு எண்ணுதலால்' 1262. இழாய் — அணிகலன்களை யுடையவளே. காரிகை – அழகு. கலம்கழியும் – வளைகழலும். 1263. உரன் – வெல்லுதல், நசைஇ – விரும்பி. வரல் — வருதல். 1264. கோடுகொடேறும் – பணைத்தெழும். 1268. வென்றீக – வெல்வானாக, மனை – மனைவி. விருந்தயர்கம் – விருந்து செய்வோம். 1269. சேண்– வெகு தொலைவான இடம். 1170. உறின் — மெய்யுறக்கலந்தால், உக்கக்கால் — இறந்துபடின்.

# 128. குறிப்பறிவுறுத்தல்

1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்க லுறுவதொன் றுண்டு.

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

1273 மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
அணியிற் றிகழ்வதொன் றுண்டு.

1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

1275. செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி
அன்பின்மை சூழ்வ துடைத்து.

1277. தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்
எழுநாளே மேனி பசந்து.

1279. தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண் டவள்செய் தது.

1280. பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப [கண்ணினாற்
காமநோய் சொல்லி இரவு.

**பொருள் :-** **1271.** கரப்பினும் — சொல்லாது மறைத்தாலும், கையிகந்து – கைகடந்து, உரைக்கலுறுவது — சொல்லுவது. **1272.** காரிகை – அழகு. காம்புஏர்தோள்– மூங்கிலையொத்த தோளையுடைய. **1273.** மணி – பளிக்குமணி, அணி – புணர்ச்சியானுய அழகு. **1274:** முகை–அரும்பு. **1275.** செறிதொடி–நெருங்கிய வளைகளையுடையாள். இறந்தகள்ளம் — மறைத்துப்போன குறிப்பு (உடன்போக்கு உட்கொண்டது). உறுதுயர் — மிக்கதுயர். **1276.** பெரிதுஆற்றி — (பிரிவுத்துன்பத்தினை) மிகவும் தணித்து. பெட்ப - மகிழும்வண்ணம், சூழ்வதுடைத்து - நினையும் தன்மையையுடையது. **1277.** தண்ணம் துறைவன் — குளிர்ந்த துறையையுடையவன், தணந்தமை — பிரிந்தமை, உணர்ந்த — அறிந்தன. **1278.** நெருநற்று — நேற்று. **1279.** அஃது என்பது உடன்போக்கு. **1280.** இரவு–உடன்போதலைக் குறித்துத் தன்னடியினை யிரத்தல்.

# 129. புணர்ச்சிவிதும்பல்

1281. உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

1282. தினைத்துணையும் ஊடாமை வேண்டும்
காமம் நிறைய வரின். [பனைத்துணையும்

1283. பேணாது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணா தமையல கண்.

1284. ஊடற்கட் சென்றேன்மற் றோழி அதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

1285. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற்
பழிகாணேன் கண்ட விடத்து. [கொண்கன்

1286. காணுங்காற் காணேன் தவறாய காணாக்காற்
காணேன் தவறல் லவை.

1287. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்தல் அறிந்தென் புலந்து.

1288. இளித்தக்க இன்னா செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

1289. மலரினும் மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

1290. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினுந் தான்விதுப் புற்று.

பொருள் :— 1283. பேணாது – அவமதித்து. பெட்பவே – வேண்டியனவே. அமையல — அமைகின்றனவில்லை. 1285. எழுதுங்கால் – கண்ணுக்கு மையிடுங்காலத்து. கோல் – கண்ணிற்கு மை திட்டுங்கோலின் இயல்பு. 1287. உய்த்தல் – இழுத்துக்கொண்டு போதல். பொய்த்தல் – புலவிபழுதுபடுதல். 1288. இளித்தக்க – இழிவு உண்டாக்கத்தக்க. 1289. செவ்வி – நலன். தலைப்படுவார் – பெறுவார். 1290. கண்ணில் துனித்து – கண் மாத்திரத்தால் ஊடி. புல்லுதல் – தழுவுதல். விதுப்புற்று – விரைதலால்.

# 130. நெஞ்சொடுபுலத்தல்

1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது.

1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்
செறாஅரெனச் சேறியென் நெஞ்சு

1293. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

1294. இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

1295. பெறாஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சும்
அறாஅ இடும்பைத்தென் னெஞ்சு.

1296. தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்
தினிய இருந்ததென் னெஞ்சு.

1297. நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

1298. எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்
உள்ளு முயிர்க்காதல் நெஞ்சு.

1299. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

1300. தஞ்சந் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

பொருள் :— 1291. அவர்க்கு ஆதல் – அவர்கருதியதற்கு உடம்படுதல். 1292. உறாஅதவர் – உறாதவர் – அன்பில்லாதவர். கண்ட கண்ணும்-உள்ளவாறு அறிந்தவிடத்தும். செறாஅர்-செறார்-வெகுளார், சேறி – செல்கிறாய். 1293. நட்டார் – நண்பர். பெட்டாங்கு – விரும்பியவாறே. 1294. சூழ்வார் – எண்ணுவார். துவ்வாய் – நுகரக் கருதாய். 1295. பெறாஅமை – பெறாமை. அறாஅ – அறா – நீங்காத. இடும்பைத்து-துன்பத்தையுடையது. 1296. தினிய-தின்பதுபோன்று துன்பஞ்செய்தற்கே. 1297. மறக்கல்லா-மறக்கமாட்டாத. மாணா-மாட்சிமையில்லாத. 1298. எள்ளின்-இகழ்ந்தால். உள்ளும்-நினைக்கும் 1299. அல்வழி – ஆகாதவழி, துன்பத்திற்கு – துன்பம் நீக்குதற்கு. 1300. தமரல்லர் தஞ்சம் – தமர் அல்லர் ஆதல் சொல்லவேண்டுமோ. தமர்-சுற்றம், ஏதிலார்-அயலார்.

# 131. புலவி

1301. புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லனோய் காண்கஞ் சிறிது.

1302. உப்பமைந் தற்றாற் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.

1303. அலந்தாரை யல்லனோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.

1304. ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.

1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து.

1306. துனியும் புலவியும் இல்லாயிற் காமங்
கனியுங் கருக்காயும் அற்று.

1307. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

1308. நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதலர் இல்லா வழி.

1309. நீரும் நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே இனிது.

1310. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சங்
கூடுவேம் என்ப தவா.

பொருள் :— 1301. இராஅ – இருந்து. புலத்தை – புலப்பாயாக. அல்லல் நோய் – துன்பத்தைச் செய்யும் காமநோய். காண்கம் – காண்போம். 1303. புல்லாவிடல்–புல்லாது செல்லுதல். அலந்தாரை–துன்பமுற்றவரை. செய்தற்று–செய்தாற்போலும். 1304. ஊடியவரை–ஊடியபரத்தையரை. உணராமை–புலவி நீக்கிக்கூடாதொழில். வள்ளி–கொடி. 1305. நல்லவர்க்குஏர்–தலைவர்க்கு அழகு. புலத்தகை–புலவிமிகுதி. 1306. துனி – முதிர்ந்தகலாம். புலவி – இளையகலாம். கருக்காய்–இளங்காய். 1309. நிழலது–நிழலில்இருந்த. வீழுநர்கண்–அன்புடையாரிடத்து. 1310. ஊடல்உணங்க–ஊடல் கொண்டமையால் மெலிந்து இருக்கவும்.

# 132. புலவிநுணுக்கம்

1311. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

1312. ஊடி யிருந்தேமாத் தும்மினார் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

1313. கோட்டுப்பூச் சூடினுங் காயும் ஒருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

1314. யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று.

1315. இம்மைப் பிறப்பிற் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

1316. உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீ
புல்லாள் புலத்தக் கனள். [ரென்றென்னைப்

1317. வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

1318. தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

1319. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதி ரென்று.

1320. நினைத்திருந்து நோக்கினுங் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

பொருள்:— 1311. பொதுவுண்பர்-பொதுவாக உண்பர். பரத்த-பரத்தமையுடையாய். 1312. என்பாக்குஅறிந்து-என்று உரையாடுவேம் என்று கருதி. 1313. ஒருத்தியை – ஒருத்திக்கு. காட்டிய – காட்டுதற்பொருட்டு. காயும்-கோபிக்கும். 1315. பிரியலம்-பிரியேம். என்றேனா-என்று கூறினேனாக. 1316. புலத்தக்கனள் – புலத்தற் கமைந்தாள். 1317. அழித்து-மீண்டும். உள்ளி-நினைத்தலால். 1318. செறுப்ப – அடக்க. மறைத்திரோ – மறைக்கின்றீரோ. 1319. உணர்த்தினும்-பணிந்துபுலவிதீர்க்கினும். ஆகுதிர்-ஆவீர்.

# 133. ஊடலுவகை

1321. இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

1322. ஊடலில் தோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.

1323. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.

1324. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
உள்ள முடைக்கும் படை.

1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலி னாங்கொன் றுடைத்து.

1326. உணலினும் உண்ட தறலினிது காமம்
புணர்தலின் ஊட லினிது.

1327. ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னுங்
கூடலிற் காணப் படும்.

1328. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலில் தோன்றிய உப்பு.

1329. ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா.

1330. ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

பொருள்:— 1322. பாடுபெறும்-பெருமையெய்தும். 1323. இயைந் தன்னார்-கலந்தாற்போல ஒற்றுமையுடைய காதலர். அகத்து-இடத்து. புத்தேணாடு-தேவருலகு. 1325. அகறலின்-கூடப்பெறாத எல்லைக் கண். 1326. அறல்-சீரணித்தல். 1330. முயங்கப்பெறின்-முயங்குதல் கூடுமாயின்.

# திருப்பனந்தாள்
# ஸ்ரீ காசிமடம் வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... | 0 | 1 |
| 2 | ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... | 6 | 0 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ,, ... | 3 | 0 |
| 4 | முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ,, ... | 1 | 0 |
| 5 | சிதம்பரச் செய்யுட்கோவை ,, ... | 0 | 12 |
| 6 | கந்தர் கலிவெண்பா, ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன் ... | 0 | 6 |
| 7 | கந்தர் கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 1 |
| 8 | கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன் ... | 0 | 4 |
| 9 | கந்தரனுபூதி ... | 0 | 2 |
| 10 | அபிராமி அந்தாதி கி. வா. ஜ. குறிப்புரையுடன் (மறுபதிப்பு அச்சில்) | | |
| 11 | சிவஞான சித்தியார், ஆங்கிலம், ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன் ... | 5 | 0 |
| 12 | ஷை ஹிந்தி மட்டும் ... | 1 | 0 |
| 13 | கந்தர் கலிவெண்பா திரு. பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன் (மறுபதிப்பு அச்சில்) | | |
| 14 | ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பா திருப்பல்லாண்டு ... | 0 | 9 |
| 15 | சுந்தரர் தேவாரம் ... | 1 | 0 |
| 16 | திருநாவுக்கரசர் தேவாரம் ... | 1 | 0 |
| 17 | திருவாசகம் ... | 0 | 6 |
| 18 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 4 |
| 19 | முதுமொழி மேல் வைப்பு ... | 0 | 12 |
| 20 | திருஞானசம்பந்தர் தேவாரம் ... | 2 | 8 |

| | | | ரூ. | அ. |
|---|---|---|---|---|
| 21 | பதினோராந் திருமுறை | ... | 1 | 4 |
| 22 | நீதிநெறிவிளக்கம்-ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புக்களுடன் | ... | 0 | 8 |
| 23 | பெரிய புராணம் | ... | 2 | 8 |
| 24 | திருமந்திரம் | ... | 1 | 8 |
| 25 | திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள் | ... | 0 | 6 |
| 26 | திருவிளையாடற் புராணம் | ... | 3 | 0 |
| 27 | திருக்கோவையார் | ... | 2 | 0 |
| 28 | தாயுமானவர் சுவாமிகள் பாடல் | ... | 1 | 4 |
| 29 | திருக்குறள்-அறத்துப்பால் ஹிந்திமொழிபெயர்ப்பு | ... | 1 | 8 |
| 30 | திருக்கைலாய ஞானவுலா | ... | 0 | 8 |
| 31 | திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா - மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மதுரைக் கலம்பகம் - நீதிநெறி விளக்கம் - மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனாட்சியம்மை குறம் | ... | 2 | 12 |
| 32 | திருவாரூர் நான்மணிமாலை - முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் | ... | 1 | 4 |
| 33 | சிதம்பர மும்மணிக்கோவை - சிதம்பரச் செய்யுட் கோவை - தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை | ... | 1 | 0 |
| 34 | பண்டார மும்மணிக்கோவை - காசிக் கலம்பகம் - சகலகலாவல்லிமாலை | ... | 1 | 0 |
| 35 | கந்தபுராணச் சுருக்கம் | ... | 1 | 12 |

கிடைக்குமிடங்கள் :-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில், ஸ்ரீவைகுண்டம்.**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

குறிப்பு:- இவ் விற்பனைத் தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்

அச்சிட்டது :— குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 52.